# மகளிர் குழுக்களும் மகளிர் திட்டங்களும்

## (SHG/ PLF/ VPRC)



### ஓர் அறிமுகக் கையேடு

**மகளிர் திட்டங்களும் மகளிர் குழுக்களும் (SHG/ PLF/ VPRC) ஓர் அறிமுகக் கையேடு**

முதல் பதிப்பு: மார்ச் 2024

பக்கங்கள்:

தொகுப்பு & வெளியீடு:
தன்னாட்சி,
69, அங்கப்ப நாயக்கன் தெரு,
சென்னை - 600 001.

தொடர்புக்கு: 9445700758, 9842780315
மின்னஞ்சல்: thannatchi@gmail.com
இணையதளம்: thannatchi.in
முகநூல்: fb.com/thannatchi
கீச்சகம் (X): @thannatchi
Instagram: @thannatchi
Telegram: @thannatchi369
வலையொளி (Youtube): @thannatchi369
Thannatchi தன்னாட்சி மற்றும் Ulaatchi Ungalaatchi

அட்டை & புத்தக வடிவமைப்பு: நா. உதயராஜன்
அச்சகம்: ஜோதி எண்டர்பிரைசஸ், சென்னை - 600 005

**நன்கொடை: ரூ 60**

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| பதிப்புரை | 4 |
| 1. மகளிர் திட்டம் – அறிமுகம் | 6 |
| 2. சுய உதவிக் குழுக்கள் (SHG) | 7 |
| 3. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு (PLF) | 13 |
| 4. கிராம வறுமை ஒழிப்பு சங்கம் (VPRC) | 21 |
| 5. வட்டார அளவிலான கூட்டமைப்பு (BLF– Block Level Federation) | 23 |
| 6. பயிற்சிகள் | 25 |
| 7. வாழ்வாதார மேம்பாடு | 28 |
| 8. இலக்கு மக்கள்/ மக்கள் நிலை ஆய்வுப் பட்டியல் (PIP – Participatory Identification of Poor) | 34 |
| 9. கிராம சேவை மையமும் மகளிர் திட்டமும் | 40 |
| 10. வெற்றிக் கதைகள் | 41 |
| 11. அரங்கூர் கிராம ஊராட்சி மகளிர் குழுக் கூட்டமைப்புப் [PLF] பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் | 44 |
| 12. பயிற்சியளிக்கத் தயாராக உள்ளோம்: | 53 |
| 13. தன்னாட்சி | 54 |

# பதிப்புரை:

தமிழ்நாட்டின் முன்னேற்றத்தில் மகளிரின் பங்கு இன்றியமையாத ஒன்று. தமிழ்நாட்டின் முதல் பெண் மருத்துவர் திருமிகு. முத்துலட்சுமி அவர்கள் தொடங்கி இன்றைக்குப் பல மகளிர், உழைப்புக்கும் கல்விக்கும் முக்கியத்துவம் கொடுத்து தங்கள் திறன்களை வளர்த்துக் கொள்வதோடு தங்கள் சமூகப் பங்களிப்பையும் வழங்கி வருகிறார்கள்.

அரசு மற்றும் தனியார் மூலம் தமிழ்நாட்டில், பல லட்சம் சுய உதவிக் குழுக்கள் தற்போது செயல்பாட்டில் இருக்கின்றன. அதில் மிகப் பெரும்பான்மையாக இருப்பவை மகளிர் குழுக்களே. கல்வி மற்றும் பொருளாதார வாய்ப்புகள் மறுக்கப்பட்ட கிராமப்புறப் பெண்களை உறுப்பினர்களாகக் கொண்ட இந்தக் குழுக்கள், நாம் அனைவரும் ஒன்றிணைந்து வலுப்படுத்த வேண்டிய மிக முக்கியமான சமூகக் களம். இக்குழுக்கள் மூலம் பெண்கள் தங்கள் தலைமைப் பண்பினையும் கூட்டுச் செயல்பாட்டுத் திறமையையும் வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். தங்கள் குடும்பத்தின் வாழ்வாதாரம், குழந்தைகளின் கல்வி போன்ற அடிப்படையான அத்தியாவசியப் பொருளாதாரத் தேவைகளுக்கு இந்தக் குழுக்கள் மூலம் உதவிகளைப் பெற்றுக் கடனைத் திரும்பச் செலுத்தி வெற்றிகரமாகக் குழுக்களை இயக்கி வருகிறார்கள். இருப்பினும், கடன் பெற்று அதனைத் திரும்பச் செலுத்துவது மட்டுமின்றி தங்களையும் மேம்படுத்திக் கொண்டு தங்கள் ஊரையும் மேம்படுத்துவதற்கான வாய்ப்பு இந்தக் குழுக்களுக்கு இருக்கிறது.

வங்காள தேசத்தில் துவங்கிய இந்த மகளிர் சிறு கடன் குழுக்கள் இன்று உலகம் முழுவதும் பரவியுள்ள நிலையில் பல இடங்களில் சிறு கடனைத் திரும்பச் செலுத்துவதைத் தாண்டி மகளிர் மேம்பாட்டுக்கான ஒரு களமாக இந்தக் குழுக்கள் மாறி இருப்பதைப் பார்க்க முடிகிறது. குறிப்பாகக் கேரளத்தில் “குடும்பஸ்ரீ” என்று அழைக்கப்படும் இந்தக் மகளிர் குழுக்கள், ஒரு இயக்கமாகப் பரிணமித்திருக்கிறார்கள். கொரோனா ஊரடங்கு காலத்தில் இவர்கள் சிறிய உணவகங்களை ஏற்படுத்திக் குறைந்த விலையில் உணவு வழங்கியதை உலகம் முழுவதும் பாராட்டினார்கள். இன்றைக்குக் கேரளத்தில் இயற்கை வேளாண்மையும், MGNREGA எனப்படும் 100 நாள் வேலைத் திட்டமும் வெற்றிகரமாகச் செயல்படுவதற்குக் குடும்பஸ்ரீயின் பங்கு மிக முக்கியமானது. இது போன்ற நம்பிக்கை அளிக்கும் முயற்சிகள் தமிழ்நாட்டிலும் நடைபெறாமல் இல்லை. ஆனால், அவை ஒரு சில குழுக்களின் சாதனையாக இருக்கின்றன. சரியான வாய்ப்புகள் வழங்கப்பட்டால் தமிழ்நாடு தழுவிய ஒரு வெற்றியாக நம் மகளிர் இயக்கம் வர முடியும் என்ற நம்பிக்கை நமக்கு உள்ளது. நாம் அனைவரும் இந்தக் குழுக்களைப் பற்றி அறிந்து கொண்டு நமது பங்களிப்பை வழங்குவதற்கு நம்மை தயார்ப்படுத்திக் கொள்வதற்கான வழிகாட்டியே இந்தக் கையேடு. குழுக்கள் அமைக்கப்படும் முறைகள், அதன் நோக்கம், குழு கூட்டமைப்பின் கட்டமைப்பு (PLF), கடன் வகைகள், வெற்றிக் கதைகள், வறுமை ஒழிப்புச் சங்கங்களின் பணிகள் (VPRC) போன்றவை பற்றிய பல தகவல்களைக் கொண்டுள்ளது இக்கையேடு. குழு துவங்க ஆர்வமுள்ள மகளிர் மட்டுமல்லாமல் சமூக முன்னேற்றத்தில் உத்வேகம் கொண்ட யாரொருவரும் வாசிக்கும் படியாகவே இக்கையடைத் தொகுத்துள்ளோம்.

ஒவ்வொரு கிராம ஊராட்சியில் இருக்கும் பெண்கள், இளைஞர்கள், சமூக ஆர்வலர்கள் என அனைவரும் இதிலுள்ள தகவல்களை உள்வாங்கி உங்கள் ஊராட்சியிலுள்ள குழுக்கள் வலுவான குழுக்களாகச் செயல்படுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம். இந்தக் கையேடு உருவாவதற்கு எதிர்பார்ப்பற்ற தங்கள் பங்களிப்பினை வழங்கிய அனைவருக்கும் நன்றிகள்.

தோழமையுடன்,
தன்னாட்சி

# 1. மகளிர் திட்டம் – அறிமுகம்

## 1.1 தமிழ்நாடு மகளிர் திட்டம் என்றால் என்ன? அதன் நோக்கம் என்ன?

தமிழ்நாட்டில் மகளிரை, சுய உதவிக்குழுக்களாக அமைத்து, திறன்வளர் பயிற்சிகள் வழங்கி, அவைகளை கூட்டமைப்புகளாக ஒருங்கிணைத்து, வங்கிகள் மூலம் கடனுதவிகள் பெறச் செய்து, சிறு தொழில்களில் ஈடுபடுத்தி அவர்தம் வருவாயைப் பெருக்குவதன் மூலம் வறுமையைக் குறைத்து, சமுதாய மற்றும் பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்திட வேண்டும் என்பதற்காகச் செயல்படுத்தப்படும் திட்டமே மகளிர் திட்டம் ஆகும். தமிழ்நாடு மகளிரின் சமூக மற்றும் பொருளாதார மேம்பாடே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

## 1.2 மகளிர் திட்டம் தமிழ்நாட்டில் எவ்வாறு செயல்படுத்தப்படுகிறது?

மகளிர் திட்டம் தமிழ்நாட்டில், 'தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்' (TNCDW – Tamil Nadu Corporation for Development of Women) மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிறுவனம் மாநிலத்திலுள்ள வறுமையில் வாடும் ஏழை மக்களுக்கு நீடித்த வாழ்வாதாரத்தை ஏற்படுத்தித் தரும் நோக்குடன் ஊரகப் பகுதியில் 'தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தினையும்' மற்றும் நகர்ப்புற பகுதிகளில் 'தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தினையும்' செயல்படுத்தி வருகிறது.

## 1.3 தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தில் மக்களின் பங்கு என்ன?

கிராம ஊராட்சியில் வாழும் மகளிர் இவ்வியக்கத்தின் கீழ், தங்களாலேயே தொடங்கப்படும் சுய உதவிக் குழுக்கள் (SHG – Self Help Group), அதன் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு (PLF – Panchayat Level Federation) மற்றும் கிராம வறுமை ஒழிப்பு சங்கம் (VPRC – Village Poverty Reduction Committee) போன்றவைகளில் இணைவதன் மூலம் இவ்வியக்கத்தில் பங்களிக்க முடியும். நிலைத்த தன்மையுடைய இத்தகையக் குழுக்கள் மூலம் வறுமையையும், கந்து வட்டிக் கொடுமையையும் ஒழிப்பதோடு, மகளிர் தங்களுக்கான வாழ்வாதார நிலையையும் குடும்பப் பொருளாதாரத்தினையும் உயர்த்த முடியும்.

***200 ரூபாயில் துவங்கி....***
***இன்று பலரின் வாழ்வில் நம்பிக்கை ஒளி ஏற்றியிருக்கும்***
***ஒரு மகளிர் குழு கூட்டமைப்பின் கதை!***
***மகளிரின் வெற்றிக்கதை !!***

***இறுதியில்...***

# 2. சுய உதவிக் குழுக்கள் (SHG)

## 2.1 சுய உதவிக் குழுக்கள் ஏன் தொடங்கப்பட வேண்டும்? அதனால் என்ன பயன்?

கிராம மகளிர், தங்களின் பொருளாதாரத் தேவைகளுக்காக அதிக வட்டியினை வசூலிக்கும் தனியார் சிறு கடன் நிறுவனத்தையோ அல்லது வேறு யாரையோ சார்ந்தில்லாமல் சுதந்திரமாக, தற்சார்பாக இயங்குவதற்கு இந்தச் சுய உதவிக் குழுக்களை தொடங்க வேண்டியுள்ளது. பொருளாதாரத் தேவைகளுக்கான கடன்களை தனியாரிடமிருந்து அதிக வட்டிக்கு வாங்காமல் அரசு உதவியுடன் தங்களுக்குள்ளேயே குறைந்த வட்டிக்கு வாங்குவதோடு அதை சுயமாக தாங்களே இக்குழுக்கள் மூலம் நிர்வகிக்கும் வாய்ப்பினையும் இந்தத் திட்டம் வழங்குகிறது. மேலும்,

- குடும்பப் பொருளாதாரத் தேவைகளை உயர்த்துதல்
- சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவித்தல்
- குழுவாக இணைந்து செயல்படுதல்

போன்ற பலன்களும் இக்குழுக்கள் மூலம் நமக்குக் கிடைக்கின்றன.

## 2.2 ஒரு கிராம ஊராட்சியில் மகளிர் சுய உதவிக் குழுக்களைத் தொடங்க என்ன செய்ய வேண்டும்?

ஒரு கிராம ஊராட்சியில் வசிக்கும் 18 வயது முதல் 60 வயது வரையிலான பெண்கள் குறைந்தபட்சம் 12 பேர் சேர்ந்து ஒரு குழுவினை அமைக்கலாம். மேலும் மாற்றுத்திறனாளிகள், நலிவுற்றோர்கள் மற்றும் முதியோர்கள் குறைந்த பட்சம் 5 நபர்களைக் கொண்டும் சிறப்புக் குழுவினை உருவாக்கலாம். சிறப்பு சுய உதவிக் குழுக்கள் மற்றும் முதியோர் சுய உதவிக் குழுக்களில் இருபாலரும் உறுப்பினார்களாகச் சேர்க்கப்படலாம். இவர்கள் அனைவரும் அந்தக் கிராம ஊராட்சியில் வசிக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

## 2.3 சுய உதவிக் குழு உறுப்பினராகத் தேவைப்படும் ஆவணங்கள் என்னென்ன?

1.குடும்ப அட்டை
2.ஆதார் அட்டை
3.வங்கிக் கணக்குப் புத்தகம்
4.வாக்காளர் அடையாள அட்டை

## 2.4 ஒரு குழுவில் எத்தனை உறுப்பினர்கள் இருக்கலாம்?

ஒரு குழுவில் அதிகபட்சம் 12 முதல் 20 உறுப்பினர்கள் வரை இருக்கலாம். அதில் குறைந்தபட்சம் 7 பேர் இலக்கு மக்கள்/ மக்கள் நிலை ஆய்வு (PIP) மூலம் கண்டறியப்பட்டவர்களாகவும் இருக்க வேண்டும்.

## 2.5 ஒரே குடும்ப உறுப்பினர்களுக்குள் குழுவை அமைத்துக் கொள்ளலாமா?

முடியாது. அவ்வாறு இரத்த பந்தம் தொடர்புடைய உறுப்பினர்களை மட்டுமே கொண்டு குழு அமைப்பது விதிகளின்படி சாத்தியம் இல்லை. 12 பேர் கொண்ட குழுவில் இருவர் அல்லது மூன்று பேர் உறவினர்களாக இருக்கலாம். மற்றபடி பொதுவாக ஊராட்சியில் வசிக்கக்கூடிய பலரைக் கொண்டு குழுக்கள் தொடங்கப்பட வேண்டும்.

## 2.6 புதிதாக ஒரு குழுவை தொடங்குவதற்கான வழிமுறைகள் என்னென்ன?

- முதல் கட்டமாக, உறுப்பினர்கள் இணைந்து குழுவிற்கு ஒரு பொதுவான பெயர் ஒன்றினைத் தேர்வு செய்ய வேண்டும். (சாதி/ மதம் சார்ந்த பெயர்கள் கண்டிப்பாக இருக்கக் கூடாது. கட்சி/ தலைவர்கள் சார்ந்த பெயர்களாகவும் இருக்கக் கூடாது. பொதுவானப் பெயர்களை வைக்க வேண்டும். எ.கா. முல்லை, வைகை)
- குழுவின் ஊக்குநர் (Animator) மற்றும் பிரதிநிதி (Representative) ஆகிய இரு பொறுப்புகளுக்கான நபர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அதை ஒரு தீர்மானப் பதிவேட்டில் எழுதிட வேண்டும்.
- அந்தத் தீர்மானப் பதிவேடு மற்றும் உறுப்பினர்களின் ஆவணங்களுடன் வங்கிக்குச் சென்று குழுவிற்கான வங்கிக் கணக்கினைத் தொடங்க வேண்டும்.

## 2.7 குழுவிற்கான வங்கிக் கணக்கினைத் தொடங்குவதற்கான வழிமுறைகள் என்னென்ன?

- குழு இடம்பெற்றுள்ள ஊராட்சிக்கு அருகாமையில் உள்ள தேசியமயமாக்கப்பட்ட வங்கி ஒன்றினில் கணக்கினைத் தொடங்க வேண்டும்.
- வங்கிக் கணக்கு தொடங்கும்போது உறுப்பினர்கள் பட்டியலைக் கொண்ட தீர்மானப் பதிவேட்டின் நகலை இணைக்க வேண்டும்.
- குழுவின் பெயரில் ஆரம்பிக்கப்படும் வங்கிக் கணக்கிற்கு (Joint account) ஊக்குநர் மற்றும் பிரதிநிதி ஆகிய இருவரும் கையெழுத்திடும் பொறுப்பாளர்களாக இருப்பார்கள்.
- உறுப்பினர்கள் செலுத்திய சேமிப்புத் தொகையை முன் பணமாகக் கொண்டு வங்கிக் கணக்கு தொடங்கப்பட வேண்டும்.

## 2.8 குழு உறுப்பினர்கள் குழுவிற்குச் சந்தா தொகை ஏதேனும் செலுத்த வேண்டுமா?

ஆம். சேமிப்புத் தொகையைத் தாண்டி உறுப்பினர்கள் அனைவரும் குறைந்தபட்சம் ஒரு சந்தா தொகையினைச் செலுத்த வேண்டும்.

## 2.9 உறுப்பினர்கள் செலுத்திய சந்தா தொகை எதற்காகச் செலவழிக்கப்படும்?

சந்தா தொகை குழுவின் நிர்வாகச் செலவினங்களுக்காகச் செலவழிக்கப்படும். குறிப்பாக, குழுப் பணிகளுக்காக ஊக்குநர் அல்லது பிரதிநிதி வங்கிக்குச் செல்லும் பயணச் செலவு உள்ளிட்டவை அதில் அடங்கும்.

## 2.10 ஒரு ஊராட்சியில் எத்தனை சுய உதவிக் குழுக்களை [SHG] உருவாக்கலாம்?

ஒரு ஊராட்சியில் எத்தனை குழுக்கள் வேண்டுமானாலும் உருவாக்கலாம். இவ்வளவு குழுக்கள் தான் உருவாக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு எதுவும் இல்லை.

## 2.11 SHG குழுவில் பராமரிக்கப்படும் பதிவேடுகள் என்னென்ன?

1. தீர்மானப் புத்தகம்
2. சேமிப்பு மற்றும் கடன் பேரேடு
3. ரொக்கப் புத்தகம்
4. பொதுப் பேரேடு (வரவு செலவு)
5. தனிநபர் பாஸ் புக்
6. வங்கி பாஸ் புக்


தமிழ்நாடு ஆண்கள் / மகளிர் மேம்பாட்டுத்திட்டம்

மகளிர் குழு தீர்மானப் புத்தகம்

(minutes book)

ரூபாய்

கூட்ட நாள் :

உறுப்பினர் மொத்த எண்ணிக்கை :

வருகை புரிந்தோர் :

கூட்ட எண் : 1

மீனாட்சியம்மன் முதியோர் குழு
வைக்கம் பெரியார் நகர்
சாமநத்தம் ஊராட்சி
மதுரை - 625 012

சென்ற கூட்டம் முடிய மொத்த சேமிப்பு : 1

நடப்பு கூட்ட சேமிப்பு :

நடப்பு கூட்டம் முடிய மொத்த சேமிப்பு :

| தீர்மான வரிசை எண் | பொருள் | தீர்மானம் | கையொப்பம் |
|---|---|---|---|
| 1. | முதியோர் குழு அமைப்பது தொடர்பாக. | தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின் படி நமது சாமநத்தம் ஊராட்சியில் 60 வயதுக்கு மேல் உள்ளோரை ஒன்று சேர்த்து ஒரு முதியோர் குழு அமைப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது | |
| 2. | குழுவிற்கு பெயர் வைப்பது தொடர்பாக. | நமது சாமநத்தம் ஊராட்சியில் முதியோர் குழுவிற்கு மீனாட்சியம்மன் முதியோர் குழு என பெயர் வைப்பது | |

## 2.12 SHG கூட்டம் எப்பொழுதெல்லாம் நடைபெறும்? என்னென்ன விவாதிக்கப்படும்?

SHG கூட்டம் மாதத்திற்கு நான்கு முறை நடைபெறும். குழுவின் உறுப்பினர்கள் மற்றும் பிரதிநிதி ஆகியோர்களே கூட்டத்தைக் கூட்டும் பொறுப்புடையவர்களாவர்.

இக்கூட்டங்களில் குழுவின் சேமிப்பு, சந்தா, உள்கடன், அசல் மற்றும் வட்டி போன்றவைகள் பற்றி விரிவாக விவாதிக்கப்படும். மேலும் குழுவில் அடுத்து யாருக்குக் கடன் தருவது என்பது பற்றியும் விவாதிக்கப்படும்.

நிதி மேலாண்மை

## 2.13 சுய உதவிக் குழுக்களுக்கான நிதி ஆதாரங்கள் என்னென்ன?

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தால் அமைக்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்கள் நிலைத்த தன்மையுடன் செயல்பட பின்வருமாறு நிதி ஆதாரங்கள் அளிக்கப்படுகிறது.

- சுழல்நிதி (RF – Revolving Fund): மூன்று மாதங்கள் முடிவடைந்த புதிய மகளிர் சுய உதவிக் குழுக்கள் தர மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டு ரூ.15,000/– சுழல் நிதியாக வழங்கப்படுகிறது. இச்சுழல்நிதியைச் சுய உதவிக் குழுக்கள் தங்களது சேமிப்பு போலவே கருதி பயன்படுத்தலாம். உட்கடனாகவும் உறுப்பினர்களுக்கு சிறு நிதியாகவும் வழங்கிக் கொள்ளலாம்.
- சமுதாய முதலீட்டு நிதி (CIF – Community Investment Fund): சுய உதவிக் குழுக்களின் பொருளாதாரச் செயல்பாடுகளுக்காகக் கடனாக வழங்கப்படும் தொகை சமுதாய முதலீட்டு நிதியாகும். சுய உதவிக் குழுக்களுக்கு அதிகபட்சத் தொகையாக ரூ.1,50,000/– வீதம் ஆண்டிற்கு 9% வட்டியுடன் கடனாக வழங்கப்படுகிறது.
- நலிவுநிலை குறைப்பு நிதி (VRF – Vulnerability Reduction Fund): மக்கள் நிலை ஆய்வின் (PIP) போது மாற்றுத்திறனாளி மற்றும் நலிவுற்றோர் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு நலிவுற்றோர் மேம்பாட்டு நிதியாக ரூ.10,000/– முதல் ரூ.25,000/– வீதம் ஆண்டிற்கு 6% வட்டியுடன் தனி நபர் கடனாக இந்நிதி வழங்கப்படுகிறது.

## 2.14 SHG களுக்கு வங்கிக் கடன் இணைப்பு உள்ளதா?

ஆம். குழு தொடங்கி 6 மாதங்கள் ஆன பின்பு தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற அனைத்து SHG களுக்கும் வங்கிக் கடன் இணைப்பு வழங்கப்படுகிறது.

## 2.15 SHG குழுக்கள் தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெறுவதற்கானத் தகுதிகள்

என்ன?

சுய உதவிக் குழுக்கள் தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்றிருக்க குறைந்த பட்சம் 6 மாத காலம் முடிவுற்று இருப்பதோடு கீழ்க்கண்டவற்றை திறம்பட செய்திருத்தல் வேண்டும்.

1. கூட்டங்கள் நடத்துதல்
2. சேமிப்பு
3. உள்கடன் கொடுத்தல்
4. கடன் வசூலித்தல்
5. பேரேடுகள் பராமரித்தல்

## 2.16 தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன்கள் எவ்வாறு வழங்கப்படுகிறது?

சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருமானத்தை அதிகரித்துக் கொள்ளவும் வங்கிக் கடன் மூலம் கடன் பெற வழிவகை செய்யப்படுகிறது. குழுவின் நிதி மேலாண்மை திறன்கள் முந்தைய கடன்களை காலம் தவறாது செலுத்தியது போன்றவைகளின் அடிப்படையில் வங்கிகள் தொடர்ந்து மறு கடன்கள்/ போதுமான கடன்கள் வழங்கும். குழுக்களுக்கு ரிசர்வ் வங்கியின் விதிமுறைகளின்படி கீழ்க்கண்டவாறு வங்கிக் கடன்கள் 9% முதல் 12% வரையிலான வட்டியுடன் வழங்கப்படுகிறது.

குழு தொடங்கிய

- முதலாமாண்டு கடன் இணைப்பாக ரூபாய் 1,50,000 க்கு மேலும்
- இரண்டாவது கடன் இணைப்பாக (2-3 ஆண்டு) ரூபாய் 3,00,000/- அதற்கும் மேலும்
- மூன்றாவது கடன் இணைப்பாக (3-4 ஆண்டு) ரூபாய் 6,00,000/- அதற்கும் மேலும்
- நான்காவது கடன் இணைப்பாக (4 ஆண்டு மற்றும் அதற்கு மேல்) நுண் கடன் திட்டம் அடிப்படையிலும் வங்கிக் கடன்கள் வழங்கப்படுகிறது.

## 2.17 நுண்கடன் திட்டம் என்றால் என்ன?

நுண் கடன் திட்டம் எனப்படுவது, ஒரு சிறு தொகையை குறுகிய ஒரு காலப்பகுதிக்குக் கடனாக வழங்கும் திட்டமாகும். அதனை குறுகிய காலப்பகுதிக்குள் வட்டியுடன் திருப்பிச் செலுத்த வேண்டும்.
இந்தக் கடன்தொகை, கடன் வழங்குபரின் நிபந்தனைகள்படி தீர்மானிக்கப்படும். கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டிய கால வரையறை கடனாளியின் திருப்பிச் செலுத்தும் ஆற்றலுக்கேற்ப 12 முதல் 24 மாதங்கள் வரையானதாக நிர்ணயிக்கப்படலாம்.

பாரம்பரிய கடனுடன் ஒப்பிடும்போது இத்தகைய குறுகிய கடன் திட்டத்தில் காணப்படும் முக்கியமான வேறுபாடு குறுகிய காலப்பகுதியும் சிறு தொகையுமேயாகும். மகளிர் திட்டத்தின் கீழ் செயல்படும் சுய உதவிக் குழுக்களின் முக்கிய நோக்கமே மக்கள் தங்களின் சிறு தேவைகளுக்கெல்லாம் தனியார் நிறுவனங்களிடமோ கந்து வட்டியிடமோ சிக்காமல் இத்தகைய நுண் கடன் திட்டம் மூலம் அரசிடமிருந்தே குறைந்த வட்டியில் கடன் பெற்று தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதேயாகும்.

## 2.18 ஒரு SHG குழு உறுப்பினர் எவ்வளவு தொகை வரை கடனாகப் பெற முடியும்? அதற்கான நிபந்தனைகள் என்ன?

ஒரு SHG குழு உறுப்பினர் குழுவிலிருந்து கடனாக ஒரு லட்சம் ரூபாய் வரை பெறலாம். அவர் முறையாக தவணை தவறாமல் அசல் மற்றும் வட்டி கட்ட வேண்டும்.

## 2.19 குழுப் பிரதிநிதிகளில் கடன்களை வசூல் செய்யும் பொறுப்புடையவர் யார்?

குழுவின் ஊக்குனரே கடன் தொகையினை வசூல் செய்யும் பொறுப்புடையவராவார்.

## 2.20 வசூல் செய்யும் தொகை எத்தனை நாட்களுக்குள் வங்கியில் செலுத்த வேண்டும்?

வசூல் செய்த அடுத்த அலுவல் நாளிலேயே வசூல் தொகையினை வங்கியில் செலுத்திவிட வேண்டும்.

## 2.21 வங்கியில் செலுத்தாமல் வசூல் தொகையைக் கையில் வைத்திருக்கலாமா?

இல்லை. வசூல் செய்த தொகையினைக் கையில் வைத்திருக்கக்கூடாது.

## 2.22 குழுவில் பெறப்படும் கடன் தொகையைக் குழுவில் இல்லாத உறுப்பினர்களுக்குக் கொடுக்கலாமா? அதற்கு வட்டி வசூலிக்கலாமா?

இல்லை. ஒரு குழு நேரடியாக உறுப்பினர் அல்லாத ஒருவருக்குக் கடன் கொடுக்கக்கூடாது. குழுவில் கடன் பெறும் ஒரு உறுப்பினர் அத்தொகையை உறுப்பினர் அல்லாத ஒருவருக்குக் கடன் கொடுக்கலாம்.

## 2.23 குழுவாக இயங்குவதன் மூலம் மகளிர் தங்களுக்கான உரிமைகளை (Entitlements) எவ்வாறெல்லாம் பெற முடியும்?

சுய உதவிக் குழுக்களாக இயங்குவதன் மூலம் மகளிர் தங்களுக்கான நிதித் சுதந்திரத்தைப் பெறுவதற்கு வாய்ப்புள்ளது. குழுவின் மூலம் கிடைக்கும் கடன் தொகையை வைத்து சுயமாகத் தொழில் தொடங்குவதன் மூலம் குடும்பப் பொருளாதாரத்தை நிறுத்துவதோடு நிதிச் சுதந்திரத்தையும் பெற முடியும். பொருளாதாரத்திற்காகப் பிறரைச் சார்ந்து இல்லாமல் சொந்தமாகச் சுயமரியாதையோடு வாழ இந்தச் சுய உதவிக் குழுக்கள் பெரிதும் உதவுகின்றன.

***மகளிர் திட்டம் மூலம் தனது ஷேர் ஆட்டோவை கொடுத்து விட்டு லோடு ஆட்டோ வாங்கி மாதம் சுமார் 25 ஆயிரம் ரூபாய் வரை சம்பாதிக்கும் சாமநத்தம் ஊராட்சியில் வசிக்கும் மகளிர் குழு உறுப்பினர் திருமிகு தமிழ்ச்செல்வியின் மகன் திரு.பிரபு.***

## 3. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு (PLF)

### 3.1. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு (PLF) என்றால் என்ன?

ஒரு ஊராட்சியிலுள்ள அனைத்து சுய உதவிக் குழுக்களும் இணைந்து உருவாக்கப்படும் கூட்டமைப்பே ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகும். ஒரு ஊராட்சியில் குறைந்தபட்சம் 10 SHG இணைந்து இந்தக் கூட்டமைப்பு உருவாக்கப்படும். 10 க்கும் குறைவான SHG க்கள் இருக்கும் ஊராட்சியில் அவை அருகிலுள்ள ஊராட்சியிலுள்ள PLF உடன் இணைக்கப்படும்.

### 3.2. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் (PLF) சுய உதவிக் குழுவை (SHG) இணைப்பது எப்படி?

குழு தொடங்கி 6 மாதம் நிறைவடைந்து குழுக்கள் தங்களை ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் நுழைவுக் கட்டணம் செலுத்தி இணைந்து கொள்ளலாம். விதிகளின் படி இயங்கும் அனைத்து வகையான SHG க்களின் உறுப்பினர்களும் PLF இன் உறுப்பினர்களாகத் தங்களை இணைத்துக் கொள்ளலாம்.

### 3.3. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் ஒரு குழு இணைவதன் மூலம் கிடைக்கும் வாய்ப்புகள்/ பயன்கள் என்னென்ன?

கூட்டமைப்பில் இணைவதன் மூலம் ஒரு குழு, நிதி சார்ந்த பயன்களையும், குழுக்களுக்குத் தரப்படும் பயிற்சிகள் உள்ளிட்டவை மூலம் சமூக மேம்பாடு சார்ந்த

பயன்களையும் அடைய முடியும்.

### 3.4. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர்கள் யார்யார்?

கூட்டமைப்பில் இணைக்கப்பட்டுள்ள அனைத்து குழுக்களின் உறுப்பினர்களும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் பொதுக்குழு உறுப்பினர்கள் ஆவர்.

### 3.5. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் கட்டமைப்பு என்ன?

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு (PLF) என்பது தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டம் 1975 இன் படி பதிவு செய்யப்பட்ட சங்கம் ஆகும். இச்சட்டத்தின் படி ஒவ்வொரு PLF இலும் ஒரு செயற்குழுவும் ஒரு பொதுக்குழுவும் இருக்கும்.

பொதுக்குழு (GB – General Body): PLF இல் இணைக்கப்பட்ட அனைத்து SHG உறுப்பினர்களும் PLF இன் பொதுக்குழு உறுப்பினர்கள் ஆவர்.

செயற்குழு (EC – Executive Committee): PLF செயற்குழு மொத்தம் 11 உறுப்பினர்களைக் கொண்டிருக்கும். இதில் 10 உறுப்பினர்கள் மகளிர் சுய உதவிக் குழுக்களில் இருந்தும் ஒரு உறுப்பினர் மாற்றுத் திறனாளிகளுக்கான சுய உதவிக் குழுக்களில் இருந்தும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். மொத்த செயற்குழு உறுப்பினர்களில் பாதி பேர் இலக்கு மக்கள்/ மக்கள் நிலை ஆய்வுப் (PIP) பட்டியலில் உள்ள மக்களாக இருக்க வேண்டும்.

இணைப்பு GO 125 QR Code

### 3.6. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் பொதுக்குழுவினைக் கூட்டுவதற்கான நடைமுறைகள் என்ன?

பொதுக்குழுக் கூட்டம்: PLF இன் பொதுக்குழு வருடத்திற்கு 4 முறை, அதாவது கிராமசபை கூடும் நாட்களான ஜனவரி 26, மே 1, ஆகஸ்ட் 15 மற்றும் அக்டோபர் 2 ஆகிய நாட்களில் கண்டிப்பாகக் கூட வேண்டும். இக்கூட்டத்தில் அனைத்து SHG உறுப்பினர்களும் கலந்து கொள்ளலாம். இக்கூட்டத்தைக் கூட்டும் பொறுப்பு PLF தலைவரையே சாரும்.

குறைவெண் வரம்பு: பொதுக்குழுவில் PLF இல் இணைந்துள்ள SHG க்களில் குறைந்தபட்சம் 50% குழுக்கள் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும். மேலும் PLF இல் இணைந்துள்ள SHG உறுப்பினர்களில் 20% உறுப்பினர்கள் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் அந்தப் பொதுக்குழுக் கூட்டம் செல்லுபடி

ஆகும்.

கூட்டத்தின் தலைமை: இக்கூட்டத்திற்கு PLF இன் தலைவரே தலைமை தாங்குவார். தலைவர் இல்லையெனில் கூட்டத்திற்கு வந்திருக்கும் உறுப்பினர்களில் ஒருவர் கூட்டத்தைத் தலைமை தாங்கி நடத்தலாம்.

## 3.7. கூட்டமைப்பின் செயற்குழு உறுப்பினர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்?

PLF இன் பொதுக்குழு தான் தேர்தல் மூலம் 11 பேர் கொண்ட PLF இன் செயற்குழுவைத் தேர்ந்தெடுக்கும். அந்த 11 பேர் கீழ்க்கண்ட முறைப்படி தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

| கிராம ஊராட்சி | ஒரு குக்கிராமத்தில் உள்ள SHG க்களின் எண்ணிக்கை | செயற்குழு உறுப்பினர்களின் (PLF – EC) பிரதிநிதித்துவம் |
|---|---|---|
| ஒரே ஒரு குக்கிராமம் உள்ள கிராம ஊராட்சி | 10 க்கும் குறைவான SHGs | PLF இல்லை |
| | 10 க்கும் அதிகமான SHGs | குறைந்தபட்சம் 10 மகளிர் SHG உறுப்பினர்கள் + ஒரு மாற்றுத்திறனாளிகள் SHG உறுப்பினர் |
| ஒன்றுக்கும் மேற்பட்ட குக்கிராமங்கள் உள்ள கிராம ஊராட்சி | 5 – 10 SHGs | குறைந்தபட்சம் 2 உறுப்பினர்கள் |
| | 11 – 20 SHGs | குறைந்தபட்சம் 3 உறுப்பினர்கள் |
| | 21 – 40 SHGs | குறைந்தபட்சம் 4 உறுப்பினர்கள் |
| | 40 க்கும் அதிகமான SHGs | குறைந்தபட்சம் 5 உறுப்பினர்கள் |

## 3.8. கூட்டமைப்பின் பொறுப்பாளர்கள் யார்யார்? அவர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்?

PLF இன் பொதுக்குழு தான் தேர்தல் மூலம் செயற்குழு உறுப்பினர்கள் 11 பேர்களிலிருந்து கீழ்க்கண்ட 4 பொறுப்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும்.

1. தலைவர்
2. செயலாளர்
3. இணைச் செயலாளர்
4. பொருளாளர்

இந்த 4 பொறுப்பாளர்களில் குறைந்தபட்சம் 2 பேர் இலக்கு மக்கள்/ மக்கள் நிலை ஆய்வுப் (PIP) பட்டியலில் உள்ளவர்களாக இருக்க வேண்டும். மற்றும் இவர்களில் செயலாளர் அல்லது பொருளாளர் இருவரில் ஒருவர் கண்டிப்பாக இலக்கு மக்கள்/ மக்கள் நிலை ஆய்வுப் (PIP) பட்டியலில் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

## 3.9. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயற்குழுவினைக் கூட்டுவதற்கான நடைமுறைகள் என்ன?

செயற்குழுக் கூட்டம்: PLF இன் செயற்குழு குறைந்தபட்சம் மாதத்திற்கு ஒரு முறை கூட்டப்பட வேண்டும். இக்கூட்டத்தைக் கூட்டும் பொறுப்பு PLF தலைவரையே சாரும்.

குறைவெண் வரம்பு: செயற்குழுக் கூட்டத்தில் குறைந்தபட்சம் 50% உறுப்பினர்கள் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் அந்தச் செயற்குழுக் கூட்டம் செல்லுபடியாகும்.

## 3.10. கூட்டமைப்பின் செயற்குழு மற்றும் பொறுப்பாளர்களின் பதவிக்காலம் என்ன?

கூட்டமைப்பின் செயற்குழு மற்றும் பொறுப்பாளர்களின் பதவிக்காலம் 2 ஆண்டுகள் ஆகும். இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இவர்கள் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இந்தத் தேர்தல், இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆகஸ்ட் 15 அன்று நடக்கும் பொதுக்குழுவில் நடத்தப்பட வேண்டும்.

இந்தத் தேர்தலில் முன்னாள் செயற்குழு உறுப்பினர்கள் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படலாம். ஆனால் முன்னாள் பொறுப்பாளர்கள் 2 முறைக்கு மேல் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படக் கூடாது. பொறுப்பாளர்கள் அனைவரும் 2 முறைக்கு ஒரு முறை சுழற்சி முறையில் கட்டாயம் மாற்றப்பட வேண்டும். அதிகபட்சம் 2 பொறுப்பாளர்கள் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படலாம். ஆனால் அவர்கள் ஒரே பொறுப்பிற்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட முடியாது.

## 3.11. தேர்ந்தெடுக்கப்பட்ட பொறுப்பாளர்களின் பொறுப்புகள் என்னென்ன?

1. **தலைவர்:** பொதுக்குழு மற்றும் செயற்குழுக் கூட்டத்தைத் தலைமை தாங்கி நடத்துதல்

2. **செயலாளர்:** மாதம் ஒரு முறை செயற்குழுவை நடத்துதல், கூட்ட ஆவணங்களைப் பராமரித்தல், பொருளாளருடன் இணைந்து வங்கிக் கணக்கைக் கையாளுதல், மகளிர் திட்டத்திற்கு அறிக்கை அனுப்புதல்
3. **இணைச் செயலாளர்:** செயலாளர் இல்லாத போது அவரின் பணிகளைச் செய்தல்
4. **பொருளாளர்:** வரவு செலவுக் கணக்கு ஆவணங்களைப் பராமரித்தல், செயலாளருடன் இணைந்து வங்கிக் கணக்கைக் கையாளுதல், தணிக்கைச் செய்தல் மற்றும் தணிக்கை அறிக்கையைப் பொதுக்குழுவில் வைத்தல்.

## 3.12. PLF பொதுக்குழு மற்றும் செயற்குழுவின் பொறுப்புகள் என்னென்ன?

PLF இன் பொதுக்குழுவின் பொறுப்புகள்:

- PLF செயற்குழு மற்றும் பொறுப்பாளர்களுக்கானத் தேர்தல் நடத்துவது,
- ஆண்டுக்கு 4 முறை கூட்டங்கள் கூட்டி SHG க்களின் நிதித் தேவை மற்றும் பொருளாதார மேம்பாடு பற்றி விவாதித்து முடிவுகள் எடுத்தல்
- PLF ஆண்டுத் திட்டம் மற்றும் வரவு செலவு அறிக்கைக்கு ஒப்புதல் வழங்குவது போன்றவைப் பொதுக்குழுவின் முக்கியப் பொறுப்புகள் ஆகும்.

PLF இன் செயற்குழுவின் பொறுப்புகள்:

- மாதம் ஒரு முறை கூட்டங்கள் கூட்டி, குழுக்களுக்கானத் தேவைகள் மற்றும் முன்னேற்றம் தொடர்பான பொருட்களைக் கூட்டத்தில் விவாதித்து முடிவுகள் எடுத்தல்
- குழுக்களுக்கான பொருளாதார மேம்பாட்டிற்குத் தேவைப்படும் நிதிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்
- SHG உருவாக்கம், குழு உருவாக்கத்திற்கான NGO உரிமைகோரல் சான்றிதழ் பெறுதல்,
- PLF பொதுச்சொத்துக்கள் மற்றும் உட்கட்டமைப்பைப் பராமரித்தல்,
- கண்காணிப்பு மற்றும் அவர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்படுவது போன்றவற்றை உறுதி செய்தல்,
- SHGகளின் கடன் மதிப்பீட்டைக் கண்காணித்தல்,
- SHGகளின் கடன் திருப்பிச் செலுத்துதலைக் கண்காணித்தல், சமூக SHG பயிற்சியாளர்களின் (CST) செயல்திறனைக் கண்காணித்தல் மற்றும்
- SHG உறுப்பினர்களுக்கான மைக்ரோ–இன்சூரன்ஸ் போன்ற சேவைகளைப் பெறுதல் போன்றவை செயற்குழுவின் முக்கியப் பொறுப்புகள் ஆகும்.

## 3.13. PLF இல் வேறு ஏதேனும் துணைக் குழுக்கள் உள்ளனவா? அவை என்னென்ன?

ஆம். PLF இல் பொதுக்குழு செயற்குழு தவிர மேலும் ஒரு 4 துணைக் குழுக்களை

அமைத்துக் கொள்ள முடியும். இக்குழுக்கள் மூலம் தன் பணிகளைப் பிரித்துக் கொண்ட திறம்பட செயலாற்ற முடியும். அந்த 4 துணைக் குழுக்கள் பின்வருமாறு..

1. **குழு அமைத்தல் மற்றும் வலுப்படுத்துதல் துணைக்குழு (SHG Formation and Strengthening Sub Committee):** புதிதாக SHG தொடங்க விரும்பும் பெண்களுக்கு அதைத் தொடங்க உதவுவதற்காகவும், மேலும் ஊரிலுள்ள அனைத்துக் குழுக்களையும் வலுப்படுத்துவதற்காகவும் இக்குழு அமைக்கப்படுகிறது.
2. **கடன் இணைப்பு மற்றும் கடன் கண்காணிப்புத் துணைக்குழு (Credit linkage monitoring Sub Committee):** அனைத்து SHGக்களின் கடன் இணைப்பைக் கண்காணிக்கவும் அதை முறைப்படுத்தவும் இக்குழு அமைக்கப்படுகிறது.
3. **வாழ்வாதாரத் துணைக்குழு (Livelihoods Sub Committee):** அனைத்து SHGக்களுக்கும் வாழ்வாதாரம் சார்ந்த பயிற்சிகள் கிடைப்பதை உறுதி செய்யவும், அவை வாழ்வாதாரம் சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடுவதை ஊக்குவிக்கவும் இக்குழு அமைக்கப்படுகிறது.
4. **சமூக மேம்பாட்டிற்கான துணைக்குழு (Sub Committee on Social issues):** ஊரில் உள்ள ஒட்டுமொத்த மகளிர் மற்றும் சமூக மேம்பாட்டிற்காகச் செயல்படவும், சமூகம் சார்ந்த/ இதர பிரச்சனைகளைச் சட்டப் பூர்வமாகத் தீர்ப்பதற்கு உதவவும் இக்குழு அமைக்கப்படுகிறது.

மேலுள்ள ஒவ்வொரு குழுவும் மொத்தம் 5 உறுப்பினர்களைக் கொண்டு உருவாக்கப்படும். அதில் 2 உறுப்பினர்கள் செயற்குழுவில் இருந்தும் 3 உறுப்பினர்கள் பொதுக்குழுவில் இருந்தும் பொதுக்குழுவின் பரிந்துரையின் பேரில் நிர்ணயிக்கப்படுவார்கள். மேலும் மொத்தமுள்ள 5 உறுப்பினர்களில் 3 பேர் மக்கள் நிலை ஆய்வுப் (PIP) பட்டியலில் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

## 3.14. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் பொதுவான கடமைகள் மற்றும் பணிகள் என்னென்ன?

- ஊராட்சியிலுள்ள தகுதியுள்ள அனைத்துப் பெண்களையும் சுய உதவிக் குழுக்களாகத் (SHG) திரட்டுதல்,
- சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை வலுப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்,
- சமூகம் மேம்பாட்டிற்கு குழுக்களின் பங்களிப்பை உறுதிப்படுத்தும் பயிற்சிகளை வழங்குதல். உதாரணமாக, கிராமசபையில் பங்கெடுப்பதின் அவசியம், சுகாதார மேம்பாடு, குழந்தைகளுக்கான ஊட்டச்சத்து வழிமுறைகள், வளரிளம் பெண்களுக்கான ஆரோக்கியம் உள்ளிட்ட தலைப்புகளில் குழு உறுப்பினர்களுக்குப் பயிற்சிகளை வழங்குதல்.
- சுய உதவிக் குழுக்களிடையே அனைத்து விதமான தகவல் பரிமாற்றம் செய்தல்,

- திறன் மேம்பாட்டுத் திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் தரப்படுத்துதல், கடன் மதிப்பீடு மற்றும் கடன் இணைப்புகளைச் சரியான நேரத்தில் ஏற்பாடு செய்தல்.
- சுய உதவிக் குழுக்களுக்கு கணக்குகளைப் பராமரிப்பது மற்றும் தணிக்கை செய்வது, வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளை மேற்கொள்வது போன்றவற்றிற்கு உதவுதல் மற்றும்
- சுய உதவிக் குழுக்களுக்கு இடையேயான முரன்களைத் தீர்ப்பது போன்றவற்றில் ஆதரவளித்தல்.

## 3.15. PLF யில் பராமரிக்கப்படும் பதிவேடுகள் என்னென்ன?

1. வருகை மற்றும் தீர்மானப் புத்தகம்
2. உறுப்பினர் பதிவேடு
3. ரொக்கப் புத்தகம்
4. பொதுப் பேரேடு
5. கடன் பேரேடு
6. சொத்துப் பதிவேடு

போன்றவை PLF – EC (செயற்குழுவால்) பாராமரிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் ஆகும். மேலும் வரவு ரசீது, செலவு ரசீது, காசோலைப் புத்தகம் மற்றும் வங்கிக்கணக்குப் புத்தகம் போன்றவை பொருளாளரால் (செயலாளருடன் சேர்ந்து) பராமரிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் ஆகும்.

**சில பதிவேடுகளின் புகைப்படங்கள்**

## 3.16. PLF பதிவேடுகளைப் பராமரிக்க பணியாளரை நியமிக்க முடியுமா?

முடியும். PLF பதிவேடுகளைப் பராமரிக்க ஒரு SHG மகளிர் உறுப்பினரைப் பணியாளராகக் கணக்காளர் ஒருவரை நியமிக்கலாம். கணக்காளர் பணிக்கான நிபந்தனைகள், ஊதியம் போன்றவற்றை PLF பொதுக்குழு தான் முடிவு செய்யும்.

## 3.17. PLF க்கான நிதி ஆதாரங்கள் என்னென்ன?

PLF இன் முக்கிய நிதி ஆதாரம் PLF பெருங்கடன்களே ஆகும். இதன் மூலம் சுமார் 10 லட்சம் முதல் 1.5 கோடி வரை மொத்த கடன் பெற்று SHGகளுக்குப் பிரித்துக் கொடுக்கப்படுகிறது.

## 3.18. ஒரு SHG குழு உறுப்பினர் PLF இலிருந்து எவ்வளவு தொகை வரை

கடனாகப் பெற முடியும்? அதற்கான நிபந்தனைகள் என்ன?

ஒரு SHG குழு உறுப்பினர் PLF இலிருந்து கடனாக ஒரு லட்சம் ரூபாய் வரை பெறலாம். கடன் பெறுவதற்கான நிபந்தனை அவர் இதற்கு முன் SHG குழுவிலிருந்து பெற்ற கடன்களுக்கு தவணை தவறாமல் அசல் மற்றும் வட்டி கட்டியிருக்க வேண்டும்.

### 3.19. கிராம ஊராட்சி நிர்வாகத்திற்கும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கும் உள்ள நிர்வாக ரீதியான தொடர்புகள் என்னென்ன?

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் பதிவேடுகள் மற்றும் VPRC பதிவேடுகளை கிராமசபையில் மக்களின் பார்வைக்குக் கட்டாயம் வைக்க வேண்டும்.

வறுமை கோட்டில் உள்ளோர் பட்டியல், இளைஞர்கள் பட்டியல், மாற்றுத்திறனாளிகள் பட்டியல், முதியோர்கள் பட்டியல், விதவைகள் பட்டியல், கணவனால் கைவிடப்பட்டவர்கள் பட்டியல், குடியிருப்புப் பட்டியல் மற்றும் வேலை கோரும் இளைஞர்கள் பட்டியல் உள்ளிட்ட தகவல்களைக் கூட்டமைப்பு ஊராட்சி நிர்வாகத்திற்கு வழங்கி ஒத்துழைக்க வேண்டும்.

***சில ஆண்டுகளுக்கு முன்பு எங்கள் ஊராட்சியில் கூட்டமைப்பு செயல்படாத நிலையில் இருந்தது. அதற்கு, அப்போது வழங்கப்பட்ட வங்கிக் கடன் தொகை தொடர்பாக முறையான விளக்கங்கள் அளிக்கப்படாத நிலையில் குழு உறுப்பினர்களிடையே ஒத்துழைப்பு இல்லாத சூழல் நிலவியது. ஏற்கனவே நம்பிக்கையில்லாத நிலையிலிருந்த இந்தக் குழு கூட்டமைப்பை மீண்டும் செயல்பாட்டுக்குக் கொண்டு வருவதற்கு நாங்கள் எடுத்த முதல் முடிவு, வெளிப்படைத்தன்மை. கடன் விவரங்கள் மட்டுமல்லாமல், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் செல்வதாக இருந்தாலும் வட்டார வளர்ச்சி அலுவலகம் செல்வதாக இருந்தாலும் பயிற்சி அல்லது பிற அலுவல் பணிகளுக்குச் செல்வதாக இருந்தாலும் பொறுப்பாளர்கள் மற்றவரிடம் தகவல் தெரிவித்து விட்டு இயங்குவது உள்ளிட்ட அனைத்து விஷயங்களிலும் தகவல்களை வெளிப்படையாக வைத்திருப்பதனால் ஒரு குடும்பமாக எங்களால் இயங்க முடிகிறது.***

***- அரங்கூர் PLF குழு***

**4.**

## 4.1. கிராம வறுமை ஒழிப்பு சங்கம் (VPRC) என்றால் என்ன?

ஒரு கிராம ஊராட்சியில் வசிக்கும் விளிம்பு நிலை மக்களின் பட்டியலைத் தொகுத்து, அவர்களின் பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டுக்கான நிதி உதவி மற்றும் பயிற்சிகளை ஒருங்கிணைக்கும் சங்கமே கிராம வறுமை ஒழிப்பு சங்கமாகும். ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் செயல்படும் இச்சங்கமானது மகளிர் திட்டத்தின் ஒரு அங்கமாகும்.

## 4.2. VPRC சங்கத்தில் மொத்தம் எத்தனை பேர் உறுப்பினர்களாக இருக்க வேண்டும்?

குறைந்தபட்சம் 11 + 0 உறுப்பினர்களைக் கொண்ட சங்கமே VPRC ஆகும்.

## 4.3. VPRC க்கு தனி வங்கிக் கணக்கு உள்ளதா?

ஆம். இதற்கென தனி வங்கிக் கணக்கு உள்ளது. இந்த வங்கிக் கணக்கிலிருந்து மகளிர் திட்டம் மூலம் கடன் பெற்று வரவு வைக்கப்படும். அதன் மூலம் உறுப்பினர்களுக்குக் கடன் உதவி வழங்கப்படும். மேலும் தூய்மைக் காவலர்களுக்கு இந்த வங்கிக் கணக்கின் மூலம் தான் ஊதியம் வழங்கப்படுகிறது. ஊராட்சி ஒன்றிய திட்ட நிதியிலிருந்து VPRC வங்கிக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு அதிலிருந்து தூய்மைக் காவலர்களுக்கு ஊதியம் வழங்கப்படுகிறது. வறுமை ஒழிப்பு சங்கத்தின் உறுப்பினராக இல்லாமலிருந்தாலும் ஊராட்சியில் வசிக்கும் வறுமை கோட்டுக்குக் கீழே உள்ளவர்கள், மாற்றுத்திறனாளிகள் சுயமாக தொழில் செய்வதற்கு 50 லட்சம் வரையில் கடன்களைக் குழுவிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

## 4.4. VPRC இன் தலைவர் மற்றும் பொறுப்பாளர்கள் யார்யார்?

கிராம ஊராட்சித் தலைவரே VPRC யின் தலைவராவார். மேலும், செயலாளர், பொருளாளர் ஆகியோர் வறுமை கோட்டுப் பட்டியலிலிருந்து (PIP) சங்கத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

## 4.5. VPRC இன் முக்கியப் பணிகள் என்னென்ன?

VPRC சங்கத்தின் முக்கியப் பணி தமது கிராமத்திலுள்ள வறுமையை ஒழிப்பதே ஆகும். வறுமையை ஒழித்து பொருளாதாரத்தை உயர்த்துவதற்கான கடன் உதவிகளைப் பெற்றுத் தருதல், கடன் பெற்றவர்கள் முறையாகத் திருப்பிச் செலுத்துவதை உறுதிப்படுத்துதல் போன்ற பணிகளோடு ஊராட்சியில் தூய்மைக் காவலர்களுக்கு ஊதியம் வழங்கும் பொறுப்பும் VPRC ஐயே சாரும்.

### 4.6. கிராம ஊராட்சி நிர்வாகத்திற்கும் VPRC க்கும் உள்ள நிர்வாக ரீதியான தொடர்புகள் என்னென்ன?

ஊராட்சி நிர்வாகத்திற்கு வறுமை கோட்டில் உள்ளோர் பட்டியல், இளைஞர்கள் பட்டியல், மாற்றுத்திறனாளிகள் பட்டியல், முதியோர்கள் பட்டியல், விதவைகள் பட்டியல், கணவனால் கைவிடப்பட்டவர்கள் பட்டியல், குடியிருப்புப் பட்டியல், குடியிருப்போர் பட்டியல், வேலை கோரும் இளைஞர்கள் பட்டியல் உள்ளிட்ட தகவல்களை வறுமை ஒழிப்பு சங்கம் ஊராட்சி நிர்வாகத்திற்கு வழங்கி ஒத்துழைக்கும்.

### 4.7. சமூகத் தணிக்கைக் குழு (SAC – Social Audit Committee) என்றால் என்ன?

சமூகத் தணிக்கைக் குழு என்பது PLF பொதுக்குழுவால் உருவாக்கப்படும் குழு ஆகும். கிராம வறுமை ஒழிப்பு சங்கம் அமைக்கப்பட்டுள்ள அனைத்து ஊராட்சிகளிலும் இக்குழு கண்டிப்பாக அமைக்கப்படும்.

இது PLF செயற்குழு உறுப்பினர்களல்லாத இதர உறுப்பினர்களால் உருவாக்கப்படும் குழுவாகும். இதில் 5 பேர் உறுப்பினர்களாக இருப்பர். இதில் 3 பேர் இலக்கு மக்கள்/ மக்கள் நிலை ஆய்வுப் பட்டியலில் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

GO 125 QR Code மற்றும் TNRDPR
Policy note 2022–2023.

### 4.8. சமூகத் தணிக்கைக் குழுவின் பணிகள் என்ன?

ஊராட்சி அளவில் செயல்படும் PLF மற்றும் VPRC யின் செயல்பாடுகளைக் கண்காணிப்பதே இதன் முக்கிய பணியாகும். PLF மற்றும் VPRC குழுக் கூட்டங்களில் உறுப்பினர்களின் பங்கேற்பு, வரவு செலவுகள், கடன் வசூலித்தலைக் கண்காணித்தல், கடன் செலுத்தாதவர்களின் மீதான நடவடிக்கைகள், குழுக்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சிகளின் தரம் போன்ற அனைத்தையும் இக்குழு கண்காணிக்கும். மேலும் கண்காணித்தவற்றை அறிக்கைகளாகவும் பரிந்துரைகளாகவும் PLF பொதுக்குழுவிற்கும், கிராமசபைக்கும் வழங்குவது இக்குழுவின் கடமையாகும்.

**குழு கடன் மூலம் பெயிண்டிங் தொடர்பான உபகரணங்கள் வாங்கி, கூலி ஆட்கள் மூலம் சொந்த தொழில் நடத்தி மாதம் ரூபாய் 30 ஆயிரம் சம்பாதிக்கும் சாமநத்தம் ஊராட்சியின் குழு உறுப்பினர் திருமிகு பாண்டீஸ்வரியின் கணவர் திரு.கண்ணன்.**

# 5. வட்டார அளவிலான கூட்டமைப்பு (BLF- Block Level Federation)

## 5.1. BLF வட்டார அளவிலான கூட்டமைப்பு என்பது என்ன?

ஒரு ஊராட்சி ஒன்றியத்திலுள்ள, அனைத்து கிராம ஊராட்சியிலுமுள்ள, அனைத்து PLF குழுக்களும் அடங்கிய கூட்டமைப்பே வட்டார அளவிலான கூட்டமைப்பு BLF [Block Level Federation] ஆகும். மேலும், இது அனைத்து வகையான குழுக்களுக்குமான பயிற்சி நிறுவனமாகவும் செயல்படுகிறது.

## 5.2. BLF எத்தனை முறை கூட்டப்பட வேண்டும். அதில் முக்கியமாக யாரெல்லாம் கலந்து கொள்ள வேண்டும்?

BLF குழு மாதத்திற்கு ஒரு முறை கூட்டப்பட வேண்டும். இதில் BLF இன் 11 செயற்குழு உறுப்பினர்களும் கலந்து கொள்ள வேண்டும்.

## 5.3. BLF இன் முக்கிய பணிகள் என்னென்ன?

தன் ஒன்றியத்துக்குட்பட்ட அனைத்து ஊராட்சிகளிலும் உள்ள PLF இன் செயல்பாடுகளைக் கண்காணித்தல், அவர்கள் முறையாக செயல்படுவதற்கான பயிற்சிகள் மற்றும் ஆலோசனைகள் வழங்குதல் போன்றவை இதன் பணிகளாகும்.

மேலும் ஒன்றிய அளவிலுள்ள அனைத்து PLF இன் செயல்பாடுகளைத் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு அறிக்கைகள் மூலம் தெரியப்படுத்த வேண்டிய பொறுப்பும் இதற்கு உண்டு.

## 5.4. BLF வரைபட விளக்கம் (block diagram)


BLF
கிராம ஊராட்சி 1
PLF
SHG 1
SHG 2
SHG 3
VPRC
CST's
கிராம ஊராட்சி 2
PLF
SHG 1
SHG 2
SHG 3
VPRC
CST's

# 6. பயிற்சிகள்

## 6.1 சமுதாய வள பயிற்றுநர்கள் (CST) என்பவர்கள் யார்? அவர்களின் பணிகள் என்னென்ன?

இவர்கள் ஊராட்சி ஒன்றிய அளவிலுள்ள பயிற்றுநர்கள் ஆவர். கிராம ஊராட்சிகளில் உள்ள SHG, PLF, VPRC போன்ற குழுக்களுக்கு பயிற்சிகள் அளிப்பதே இவர்களது பணி. முக்கியமாக SHG குழு உருவாக்குதல், அவற்றைக் கண்காணித்தல், அக்குழுக்கள் கடனுதவி பெற உதவுதல், தொழில்கள் தொடங்க உதவுதல், அதற்கான பயிற்சிகள் அளித்தல் போன்றவை இவர்களின் வேலையாகும். இவர்களுக்கு 2500 ரூபாய் ஊதியம் வழங்கப்படுகிறது. மேலும், பதிவேடுகளைச் சரிபார்த்தல், நடைபெறும் பயிற்சிகளைப் பற்றி குழு உறுப்பினர்களுக்குத் தகவல் தெரிவித்தல் உள்ளிட்ட பணிகளை இவர்கள் மேற்கொள்ள வேண்டும்.

## 6.2 மகளிர் திட்டத்திலுள்ள சமுதாய அமைப்புகளுக்கு (SHG, PLF, VPRC, BLF) என்னென்ன திறன் வளர்ப்புப் பயிற்சிகள், யாரால் வழங்கப்படுகின்றன?

சுய உதவிக்குழு உறுப்பினர்கள் சிறந்த சேவை பெறுவதை உறுதி செய்வதற்க்காக இந்தச் சமுதாய அமைப்புகளுக்கு (SHG, PLF, VPRC, BLF) தொடர் திறன் வளர்ப்புப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. அவை பின்வருமாறு..

1. புதிதாக அமைக்கப்பட்ட சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள், ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கான பயிற்சி
2. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு நிர்வாகிகளுக்கு நிர்வாகம் மற்றும் நிதி மேலாண்மை சார்ந்த பயிற்சி
3. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயற்குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி
4. கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு கணக்காளர்களுக்குப் புத்தக பராமரித்தல் பயிற்சி
5. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் துணைக் குழுக்கள் மற்றும் சமூகத் தணிக்கைக் குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி
6. கிராம வறுமை ஒழிப்பு சங்க அலுவலக நிர்வாகிகள் மற்றும் அதன் உறுப்பினர்களுக்கு ஆளுமை மற்றும் நிதி குறித்த மேலாண்மைப் பயிற்சி
7. வட்டார அளவிலான கூட்டமைப்புகளின் நிர்வாகக் குழு மற்றும் உறுப்பினர்களுக்கான பயிற்சி
8. மாவட்ட அளவில் மகமை உறுப்பினர்களுக்கான பயிற்சி
9. சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுநர்களுக்குப் புத்தாக்கப் பயிற்சி
10. மாநில வள வல்லுநர் மற்றும் மாவட்ட வள வல்லுநர்களுக்குப் புத்தாக்கப் பயிற்சி
11. மாவட்டங்கள் மற்றும் வட்டாரங்களில் பணியாற்றும் அலுவலர்களுக்குப் புத்தாக்கப் பயிற்சி.

இந்தப் பயிற்சிகள் அனைத்தும் ஊரக வாழ்வாதார இயக்கம் மூலம் சமுதாய வளப் பயிற்றுநர்களால் (CST) வழங்கப்படுகின்றன.

## 6.3 பணியமர்வுடன் கூடிய திறன் பயிற்சிகள் எந்தத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது?

வாழ்வாதாரத் திறன் பயிற்சிகள், ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் இணைந்து வழங்கப்படுகிறது. இப்பயிற்சி தீன் தயாள் உபாதியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU GKY) என்ற திறன் பயிற்சித் திட்டம் மூலம் மாநில ஊரக வாழ்வதார இயக்கத்தால் வழங்கப்பட்டு வருகிறது.

## 6.4 தீன் தயாள் உபாதியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU GKY) திறன் பயிற்சித் திட்டத்தில் எவ்வாறு சேருவது?

18 வயதிலிருந்து 35 வயது வரையுள்ள அனைத்து இளைஞர்களும் இத்திட்டத்தில் சேரலாம். மேலும் பெண்கள், மாற்றுத்திறனாளிகள், நலிவடைந்தோர் மற்றும் விளிம்பு நிலை பழங்குடியினர் முதலியோருக்கு வயதுவரம்பு 45 ஆகத் தளர்த்தப்பட்டுள்ளது.

## 6.5 தீன் தயாள் உபாதியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU GKY) திறன் பயிற்சி திட்டத்தின் சிறப்பம்சங்கள் என்ன?

- 3 முதல் 17 மாதங்கள் வரை வேலைவாய்ப்புடன் கூடிய சந்தை சார்ந்த தொழில் திறன் பயிற்சிகள்.
- தொழில்திறன் பயிற்சி பெற்ற 70% இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உத்திரவாதம்.
- வேலைவாய்ப்பு முகாமின் மூலம் நேரடி வேலைவாய்ப்பு போன்றவை இத்திட்டத்தின் சிறப்பம்சங்கள்

## 6.6 பயிற்சி காலத்தில் ஊக்கத்தொகை எதுவும் வழங்கப்படுமா?

இல்லை. ஊக்கத்தொகை எதுவும் வழங்கப்படமாட்டாது.

## 6.7 பயிற்சிக்குப் பின்பு வேலை வாய்ப்புக்கான வழிகாட்டுதல்கள் வழங்கப்படுமா ?

ஆம். பயிற்சிக்குப் பிறகு தகுதியின் அடிப்படையில் வேலைவாய்ப்புக்கான வழிகாட்டுதல் வழங்கப்படும். தவிர வேலைவாய்ப்பு முகாமின் மூலம் நேரடி வேலைவாய்ப்பிற்கும் வழிவகை செய்யப்படும்.

## 6.8 பயிற்சிக்குப் பின் சான்றிதழ் வழங்கப்படுமா?

ஆம். பயிற்சிக்குப் பின் பயிற்சிக்கான சான்றிதழ் வழங்கப்படும்.

### 6.9 பயிற்சி அடிப்படையில் அரசு வேலை வாய்ப்புக்காகப் பதிவு செய்யலாமா?

இல்லை. இது திறன் மேம்பாட்டுப் பயிற்சி மட்டுமே.

## 7. வாழ்வாதார மேம்பாடு

## 7.1 மகளிர் திட்டத்தில் வாழ்வாதாரம் சார்ந்த மேம்பாட்டு நடவடிக்கைகளாக என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது? இதன் பயனாளர்கள் யார்யார்?

ஊரகப் பகுதிகளில் உள்ள சுய உதவிக் குழு குடும்பங்களின் தொடர் மற்றும் நிலையான வருமானத்தை உறுதிப்படுத்த, ஒவ்வொரு குடும்பத்திற்கும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வாழ்வாதார நடவடிக்கைகள் மேற்கொள்வதை வாழ்வாதார இயக்கம் முக்கிய நோக்கமாக கொண்டுள்ளது. மேலும், வறுமை மற்றும் சமத்துவமின்மையை குறைக்கும் வகையில் ஒவ்வொரு சுய உதவிக் குழுவின் குடும்பத்தின் ஆண்டு வருமானத்தை இரட்டிப்பாக்கும் இலக்குடன் ஊரக வாழ்வாதார இயக்கம் மூலம் மேற்கொள்ளப்படும் வாழ்வாதாரம் சார்ந்த மேம்பாட்டு நடவடிக்கைகளைக் கீழ்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

1. பண்ணை (விவசாயம்) சார்ந்த வாழ்வாதார நடவடிக்கைகள்
2. பண்ணை (விவசாயம்) சாரா வாழ்வாதார நடவடிக்கைகள்
3. சந்தைப்படுத்தும் நடவடிக்கைகள்

தகுதியான ஊரக ஏழைக் குடும்பங்களிலுள்ள மகளிர், இலக்கு மக்கள்/ மக்கள் நிலை ஆய்வில் கண்டறியப்பட்டவர்களில் நலிவுற்றோர், பட்டியல் சமூக/ பட்டியல் பழங்குடியினர், மாற்றுத்திறனாளிகள், முதியோர் மற்றும் சிறுபான்மையினர் போன்றவர்கள் இந்தத் திட்டத்தில் பங்கேற்கத் தகுதி உள்ளவர்களாவார்கள்.

## 7.2 பண்ணை சார்ந்த வாழ்வாதார நடவடிக்கைகள் என்னென்ன?

பண்ணை (விவசாயம்) மகளிர் குடும்ப வருமானத்தினைப் படிப்படியாக உயர்த்தவும் அவர்கள் தொடர்ச்சியாக வருமானம் பெறுவதற்கும், முன்னோடித் தொழில் நுட்பங்களில் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும் மற்றும் செயல்விளக்கங்களும் மகளிர் திட்டம் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. முக்கியமாக பயிர் வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு, அங்கக/ இயற்கை வேளாண்மை (Organic farming), ஊட்டச்சத்து காய்கறித் தோட்டம் அமைத்தல் (வீடுகளில் உள்ள சிறிய அளவிலான இடங்களில் காய்கறித் தோட்டம் அமைத்தல்), பூச்சி மருந்தில்லாம வேளாண்மை மேற்கொள்ள உயிரியல் இடுபொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனை ஆகியவற்றுக்குரிய திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதில் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் பங்கேற்று தங்களின் வருமானத்தினைப் பெருக்கிக் கொள்ள வாய்ப்புள்ளது.

மேலும், பண்ணை மற்றும் பண்ணை சார்ந்த வாழ்வாதார செயல்பாடுகளின் கீழ் பயிற்சி வழங்குதல், குழுக்கள் உருவாக்குதல் மற்றும் தொகுப்பு நடவடிக்கைகள் மூலம் சிறந்த பண்ணை செயல்பாடுகளை மேற்கொண்டு அதிக மகசூல் மற்றும் உரிய விலை பெற நடவடிக்கைகள் இதன்மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தரிசு நிலங்களில் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகப்படுத்துவதற்கு வேளாண்மை

மற்றும் உழவர் நலத் துறையின் முதன்மைத் திட்டமான கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்துடன் இணைந்து தொகுப்பு அணுகுமுறை மூலம் இந்நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 7.3 மகளிர் திட்டத்தில் இயற்கை வேளாண் சார்ந்த முன்னெடுப்புகள் செய்யலாமா?

கண்டிப்பாகச் செய்யலாம். மகளிர் திட்டத்தில் இயற்கை வேளாண் தொகுப்புகள் ஏற்படுத்துவதன் மூலம் இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்கும் வேலைகளைச் செய்ய இயலும். வேளாண் சாகுபடியில் நிலைத்த நீடித்த இயற்கையான சாகுபடி முறைகளையும், முன்னோடியான கால்நடைப் பராமரிப்பு முறைகள், மரம் நீங்கலான வனப்பொருட்களைச் சேகரித்தல் மற்றும் மதிப்புக் கூட்டுதல் போன்றவற்றின் மூலமாக ஏழை எளிய மக்களின் வாழ்வாதார முறைகளை வலுப்படுத்தவும், விவசாயிகளை அடுத்த நிலைக்கு முன்னேற்றுவதற்கு இயற்கை வேளாண்மை சான்று பெறுவதற்கும், சந்தைப்படுத்துதலில் இலாபகரமான விலை பெற வழிவகை செய்யவும் இயற்கை வேளாண் தொகுப்புகள் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் மூலம் ஏற்படுத்தபடுகின்றன. இவை கீழ்க்கண்ட நன்கு வரையறுக்கப்பட்ட திட்டச் செயலாக்க நடவடிக்கைகள் மூலம் உருவாக்கப்படுகின்றன.

1. இயற்கை விவசாயம் செய்ய ஆர்வமுள்ள விவசாயிகளைக் கொண்ட அருகாமையில் உள்ள தொகுப்பு கிராமங்களைத் தேர்வு செய்வது.
2. ஆர்வமுள்ள மகளிர் விவசாயிகளைத் தேர்வு செய்வது.
3. தமிழ்நாடு அங்ககச் (Organic) சான்றிதழ் துறையுடன் இணைந்து இயற்கை வேளாண் தொகுப்பின் பயனாளிகளுக்கு அங்கக/ இயற்கை வேளாண்மைப் பயிற்சி மற்றும் அங்ககச் சான்றிதழ் வழங்குதல்
4. இந்தத் திட்டத்தில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் சமுதாய வள பயிற்றுநர்கள் மற்றும் பெண் விவசாயிகளுக்கு உரிய திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்குதல்.

இது தவிர கடந்த 2023 ஆம் ஆண்டு சிறுத்தானிய ஆண்டாக அறிவிக்கப்பட்டதால், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், சிறுதானிய உற்பத்திக்குப் புத்துயிர் அளிக்கும் விதமாக வேளாண்மைத் துறையுடன் இணைந்து உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரித்தல், சிறுதானிய உணவை உண்பதால் ஏற்படும் ஆரோக்கிய நன்மைகள் குறித்து நுகர்வோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல், சிறுதானிய மதிப்புக் கூட்டுப் பொருட்களின் உற்பத்தியை ஊக்குவித்தல் மற்றும் புதிய சிறுதானிய பொருட்களை உருவாக்க நடவடிக்கைகளை மேற்கொள்தல் போன்ற செயல்பாடுகளையும் செய்து வருகிறது.

## 7.4 இயற்கை வேளாண் சார்ந்த முன்னெடுப்புகளுக்கு நிதி உதவி உள்ளதா? எவ்வளவு நிதி உதவி வழங்கப்படுகிறது?

இயற்கை வேளாண் சார்ந்த முன்னெடுப்புகளுக்கு நிதி உதவி கண்டிப்பாக உள்ளது. இயற்கை விவசாய முறைகளில் ஆர்வமுள்ள 50 விவசாயிகள் கொண்ட இயற்கை விவசாய தொகுப்பிற்கு திறன் மேம்பாட்டு பயிற்சி, பதிவு செய்தல், சான்றிதழ்கள் பெறுதல் மற்றும் அங்கக/ இயற்கை இடுபொருள் அங்காடி (Organic Input Shop) அமைத்தல் மற்றும் ஒருங்கிணைந்த விவசாய முறையை ஊக்குவிப்பதற்காக ரூ.6 லட்சம் வழங்கப்படுகிறது.

## 7.5 மகளிர் திட்டத்தில் வேளாண் சார்ந்த வேறு என்னென்ன முன்னெடுப்புகள் மேற்கொள்ளலாம்? அதற்கான நிதி உதவிகள் என்னென்ன?

1. ஒருங்கிணைந்த பண்ணை தொகுப்புகள்

வேளாண்மை தொழில்களிலிருந்து நிலையான வருமானம் பெறுவதற்காக வேளாண் மகளிர் விவசாயிகள் வேளாண் தொழிலுடன் கால்நடை வளர்ப்பையும் சேர்த்து ஒருங்கிணைந்த பண்ணை முறை விவசாயத்தை மேற்கொள்ள ஊக்குவிக்கப்பட்டு வருகின்றனர். ஒவ்வொரு ஒருங்கிணைந்த பண்ணை தொகுப்புகளின் கீழ் ஒருங்கிணைந்த பண்ணை அமைப்பு உருவாக்கப்படும். ஒவ்வொரு ஒருங்கிணைந்த பண்ணை தொகுப்பிலும் இயந்திர வாடகை மையம், இயற்கை விவசாய இடுபொருட்களை தயாரித்து விற்பனை செய்யக் கூடிய அங்காடி, விவசாயத்துடன் கறவை மாடுகள் வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, கோழி, மீன் வளர்ப்பு போன்றவற்றை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த பண்ணை உருவாக்கப்படும். மேலும் தாவர மற்றும் மண் மாதிரிகளில் பூச்சி மருந்து மற்றும் இரசாயன உரங்களின் மிச்சத்தினைக் கண்டுபிடிப்பதற்கான பண்ணை ஆய்வுக்கூடமும் அமைக்கப்படும்.

இதற்காக 2 முதல் 3 கிராம ஊராட்சிகளில் இருந்து சுமார் 250 பெண் விவசாயிகள் தொகுப்பாக (Clusters) உருவாக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு வாழ்வாதார சேவை மையத்தை நிறுவுதல், கால்நடைகளை கொள்முதல் செய்தல், ஊடுபயிர்கள் பயிரிடல், இயற்கை இடுபொருட்கள் அலகு அமைத்தல், இயந்திர வாடகை மையம் ஏற்படுத்தல் மற்றும் வணிகக் குறியீடு மற்றும் சந்தைப்படுத்தல் குறித்த பயிற்சி ஆகியவற்றிற்காக ஒரு தொகுப்பிற்கு (Clusters) ரூ.20 லட்சம் வழங்கப்படுகிறது.

2. உற்பத்தியாளர் குழுக்கள் அமைத்தல்

கூட்டு கொள்முதல் கூட்டு பேரம் பேசுதல் மற்றும் கூட்டு சந்தைப்படுத்துதல் ஆகியவற்றுக்கு உற்பத்தியாளர்களை உற்பத்தியாளர் குழுக்களாக உருவாக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இதனால் உற்பத்தி செய்யும் வேளாண் விளைபொருட்களை அருகாமையில் உள்ள சந்தைகளில் சந்தைப்படுத்தும் நடவடிக்கைகளில் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் ஈடுபடுத்தப்பட்டு தொடர் வருமானம் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

உற்பத்தியாளர் குழுக்களுக்கு அவற்றின் உற்பத்தித்திறன் மற்றும் லாபத்தை மேம்படுத்துவதற்கான செயல்பாட்டு மூலதனம் மற்றும் உள்கட்டமைப்பு ஆதரவிற்காக ரூ.2 லட்சம் சூழல் நிதியாக வழங்கப்படுகிறது. நிதியுதவி தவிர, வணிகத் திட்டம் தயாரித்தல், நிறுவன மேம்பாட்டிற்கான தயாரிப்புகளை அடையாளம் காண்பது மற்றும் புதிய விவசாய சம்பந்தமான தொழிநுட்பங்கள், சிறந்த செயல்பாடுகள் மற்றும் தொழில்நுட்ப நடவடிக்கைகள் குறித்த பயிற்சிகளும் அளிக்கப்படுகிறது.

## 7.6 பண்ணை சாரா வாழ்வாதார நடவடிக்கைகள் என்னென்ன?

கிராமப்புற ஏழை மக்களுக்கு நிலையான வருமானத்தை உறுதி செய்யவும் மற்றும் வருமானத்தைப் பெருக்கவும் பல்வேறு பண்ணை சாரா தொழில்கள் ஊக்குவிக்கப்பட்டு வருகிறது.

பண்ணை சாரா முயற்சிகளில் உற்பத்தி மற்றும் சேவைப் பிரிவுகளின் கீழ்க்கண்ட செயல்பாடுகள் அடங்கும்:

- குறு நிறுவன மேம்பாடு
- தொகுப்பு மேம்பாடு – கைவினைஞர் & துறை சார்ந்த தொகுப்புகள்

## 7.7 குறு நிறுவன மேம்பாட்டிற்காக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன?

குறு நிறுவனங்களின் மேம்பாட்டிற்காக, தேவையின் அடிப்படையில் தொழில் முனைவோர்களுக்கு பயிற்சி வழங்குதல், முதலீட்டிற்கான வங்கி இணைப்பு மற்றும் சந்தைப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. சமுதாய வல்லுநர்கள் மூலம் புதிய நிறுவனங்கள் மற்றும் பழைய தொழில் நிறுவனங்களை அடையாளம் கண்டு, அவர்களுக்கு வணிகத் திட்ட அறிக்கை, சந்தை நுண்ணறிவு, சட்டபூர்வ தீர்வுகள், உரிமம் மற்றும் தரப்படுத்துதல் போன்றவற்றிற்கு வழி வகை செய்யப்படுகிறது.

## 7.8 தொகுப்பு மேம்பாட்டிற்காக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன?

தொகுப்பு மேம்பாட்டிற்காக பொது சேவை மையத்தினை நிறுவுவதல், அதன் மூலம் உற்பத்திப் பொருட்களின் தரம் பிரித்தல், பேக்கேஜிங் மற்றும் “மதி” என்ற பெயரில் வணிகக் குறியீட்டை ஏற்படுத்தி விற்பனை செய்ய உதவுதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. தொகுப்பினை உருவாக்குவதால் உற்பத்தி செலவுகள் குறைந்து இலாப வரம்பு அதிகரிப்பதன் மூலம் பொருளாதார நிலை உயருகிறது. இத்தொகுப்பு முறையானது, ஊரகப் பகுதிகளில் உற்பத்திப் பொருட்களை ஒருங்கிணைத்தல், தரம் பிரித்தல், மதிப்பு கூட்டுதல் மற்றும் சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருதல் ஆகிய செயல்களுக்கு ஆதரவளிக்கிறது.

## 7.9 மகளிர் திட்டத்தில் கைவினைஞர்கள்/ கைவினைப் பொருள்களுக்கான நடவடிக்கைகள் மற்றும் சந்தை வாய்ப்புகள் என்ன உள்ளன?

ஒரு குறிப்பிட்ட பகுதிக்குள், பாரம்பரிய தொழில்களான கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்யும் குறு தொழில் நிறுவனக் குழுக்களை உருவாக்கி தொகுப்பு அமைக்கப்படுகிறது. இத்தொகுப்புகள் அவர்களுக்குள் அனுபவப் பரிமாற்றம் நடப்பதற்கு உதவுவதோடு புதிய தொழில்நுட்ப முயற்சிகளைப் பயன்படுத்துவதன் மூலம் வடிவமைப்பு, தரம் மற்றும் சந்தை வாய்ப்புகளையும் மேம்படுத்த உதவுகிறது. தவிர ஆடைகள், சணல் தயாரிப்பு போன்ற குறு தொழில்களுக்கும் இம்மாதிரியான தொகுப்புகள் உருவாக்கப்பட்டு வாழ்வாதாரம் மேம்படுவதற்கு இத்திட்டத்தின் மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் கைவினைப்பொருட்கள் செயற்கை அணிகலன்கள், சணல் பொருட்கள், தோல் பொருட்கள், சிறு தானியங்கள் போன்ற மகளிர் சுய உதவிக்குழு பொருட்களின் விற்பனையை அதிகரிக்கவும், பொருட்களை விளம்பரப்படுத்தி சந்தைப்படுத்திடவும் ஒவ்வொரு ஆண்டும் சுய உதவிக்குழு விற்பனை விழா என்ற பெயரில் பொங்கல், சித்திரை மற்றும் நவராத்திரி பண்டிகை காலங்களில் மாநில அளவிலான மூன்று கண்காட்சிகளை நடத்துகின்றது. மகளிர் சுய உதவிக்குழுக்களின் விற்பனைத் திறனை மேம்படுத்துவதற்கும் மொத்த கொள்முதல் தரம் மற்றும் விலை நிர்ணயம் ஆகியவற்றின் திறனை வளர்ப்பதற்கும் இக்கண்காட்சிகள் உதவுகின்றன.

## 7.10 சுய உதவிக் குழுக்கள் மூலம் தயாரிக்கப்பட்ட பொருட்களை எவ்வாறு சந்தைப்படுத்துவது?

சுய உதவிக் குழுவினர் உற்பத்தி செய்யும் பொருட்களின் சந்தைப்படுத்துதலை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக, சந்தைக்குரிய நுண்ணறிவு மற்றும் ஆய்வு, பொருட்களை வகைப்படுத்துதல், உற்பத்திப் பட்டியல் தயாரித்தல், பேக்கேஜிங் மற்றும் லேபிளிங் போன்றவற்றை மேம்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் இணைந்து மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை மதி விற்பனை அங்காடிகள், கண்காட்சிகள் மற்றும் வணிக வளாகங்கள் மூலம் சந்தைப்படுத்திட தொடர்ந்து ஆதரவளித்து வருகிறது. இதற்காக கியோஸ்க்குகள் (kiosks) மற்றும் வணிக வளாகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்கண்காட்சிகள் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களுக்கு கூடுதல் விற்பனை வாய்ப்புகளையும் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் விற்பனைத் திறனை மேம்படுத்துவதற்கும் உதவுகின்றன. மேலும் பொங்கல் பண்டிகையின்போது இயற்கை முறையில் விளைவித்த மற்றும் சுற்றுச் சூழலுக்கு உகந்த உற்பத்திப் பொருட்களை கொண்ட பரிசு பெட்டகங்கள் விற்பனை செய்யும் முறையானது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், வாடிக்கையாளர்கள் மற்றும் நிறுவனங்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப மாநில வழங்கல் மற்றும்

விற்பனைச் சங்கமானது பிரத்தியேகமான பரிசு பெட்டகங்களை தயாரித்து விற்பனை செய்யப்படுகிறது.

## 7.11 வணிக வளாகங்கள் மூலம் சந்தைப்படுத்துதல் எவ்வாறு நடைபெறுகிறது?

சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களுக்கு நல்ல சந்தை வாய்ப்புகளை வழங்கும் வகையில் மாவட்ட தலைமையகங்களில் உள்ள நகரத்தின் பிரதான இடங்களில் பூமாலை வணிக வளாகங்கள் அமைக்கப்பட்டு அல்லது பழையவை புதுப்பிக்கப்பட்டு வருகிறது. மாவட்டம் முழுவதும் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்யும் மையமாக இந்த பூமாலை வணிக வளாகங்கள் செயல்படுகிறது. சந்தை நுண்ணறிவைப் பெறுவதற்கும் மாவட்டம், மாநிலம் மற்றும் தேசிய அளவில் கண்காட்சிகளுக்கான பொருட்களைத் தேர்ந்தெடுப்பதிலும் இம்மையங்கள் முக்கிய அங்கம் வகிக்கிறது.

## 7.12 மதி விற்பனை அங்காடிகள் மூலம் சந்தைப்படுத்துதல் எவ்வாறு நடைபெறுகிறது?

சுய உதவிக் குழு உற்பத்தி செய்யும் பொருட்களுக்கான தேவை நகர்ப்புரம் மற்றும் சுற்றுலாத் தலங்களில் தொடர்ந்து அதிகரித்து வருவதால் மாநிலம் முழுவதும் மதி விற்பனை அங்காடி என்ற விற்பனை அங்காடிகள் அமைக்கப்பட்டுள்ளது. மகளிர் மற்றும் நலிவுற்றோரின் உற்பத்திப் பொருட்களின் விற்பனையை உயர்த்தும் வகையில் அதிக இடங்களுக்கு சென்று பெருமளவில் விற்பனை செய்திடும் வகையில் மின் வண்டிகளும் வழங்கப்பட்டது வருகிறது.

## 7.13 வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்கள் யார்யார்?

- ஊராட்சி அளவில் – சமூக வளப் பயிற்றுநர் (CST)
- வட்டார அளவில் – வட்டார இயக்க மேலாளர்
- மாவட்ட அளவில் – திட்ட இயக்குநர்
- மாநில அளவில் – முதன்மைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

# 8. இலக்கு மக்கள்/ மக்கள் நிலை ஆய்வுப் பட்டியல் (PIP - Participatory Identification of Poor)

## 8.1 மக்கள் நிலை ஆய்வு (PIP) என்றால் என்ன?

மக்கள் நிலை ஆய்வு என்பது மக்கள் பங்கேற்புடன் கிராம மக்கள் ஒன்று சேர்ந்து அவர்களின் பொருளாதார அடிப்படையில் குடும்பங்களை வரிசப்படுத்தி ஏழை மற்றும் நலிவுற்ற குடும்பங்களை அடையாளம் காணும் ஒரு செயல்முறை ஆகும். இதன் மூலம் கிராம மக்கள் மிகவும் ஏழை, மாற்றுத்திறனாளி, நலிவுற்றோர், பழங்குடியினர், ஏழை, நடுத்தரம், வசதியானவர் என வகைபடுத்தப்பட்டு இலக்கு மக்கள் அடையாளப்படுத்தப்படுகின்றனர்.

## 8.2 இலக்கு மக்கள் எதற்காக அடையாளப்படுத்தப்படுகின்றனர்?

தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு சமூக, வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டங்களின் பயனாளிகளை அடையாளம் காணுவதற்காகவே மக்கள் நிலை ஆய்வின் மூலம் இலக்கு மக்கள் அடையாளப்படுத்தப்படுகின்றனர்.

## 8.3 PIP பட்டியல் ஏன் முக்கியம்?

இது மிகவும் முக்கியமான ஆவணம். நமது ஊராட்சியில் உள்ள முதியவர்கள், நீண்ட நாள்பட்ட நோயினால் பாதிக்கப்பட்டவர்கள், நலிவுற்றோர், மாற்றுத்திறனாளிகள், மாற்றுப் பாலினத்தினர், பழங்குடியினர் உள்ளிட்ட பலரின் சமூகப் பொருளாதார சூழலை அறிந்துகொண்டு அவர்களுக்கான வாழ்வாதார மேம்பாட்டு உதவிகளைச் செய்வதற்கு இப்பட்டியலே அடிப்படையாக உள்ளது. இம்மக்களே, இலக்கு மக்கள் என குறிப்பிடப்படுகிறார்கள்.

## 8.4 PIP பட்டியலுக்கும் BPL (வறுமை கோட்டுக்குக் கீழ் உள்ளோர்) பட்டியலுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

வறுமை கோட்டுக்குக் கீழ் உள்ளோர் பட்டியல் மக்களின் பொருளாதார நிலையினை மட்டுமே கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்ட ஒன்று. ஆனால் இலக்கு மக்கள்/ மக்கள் நிலை ஆய்வுப் பட்டியல் கிராம மக்களின் சமூக மற்றும் பொருளாதார நிலையை கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்ட பட்டியல்.

## 8.5 PIP யாரால் எவ்வாறு தயாரிக்கப்படுகிறது?

இலக்கு மக்கள்/ மக்கள் நிலை ஆய்வுப் பட்டியல் ஊரக வாழ்வாதார இயக்கம் மூலம் கிராம ஊராட்சியில் உள்ள VPRC மற்றும் PLF ஆல் அனைத்துத் தரப்பு

மக்களின் பங்கேற்புடன் தயாரிக்கப்படுகிறது. இப்பட்டியல் தயாரிப்பு பல்வேறு தொடர் படிநிலைகளை உள்ளடக்கியுள்ளது. இப்படிநிலைகளைச் செயல்படுத்திட வட்டார இயக்க மேலாளர்/ வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் பிற சமுதாயப் பணியாளர்கள் உதவி பரிக்கின்றனர்.

## 8.6 இப்பட்டியலைத் தயாரிப்பதற்கான படிநிலைகள் என்னென்ன ?

கீழ்கண்ட முக்கிய படிநிலைகளை கொண்டது இப்பணி.

1. முதலில், மக்கள் நிலை ஆய்வு செயல்முறை குறித்து கிராமப் பொது மக்களுக்குத் தெரியபடுத்தல், பட்டியல் தயாரிப்பில் அவர்களின் பங்களிப்பை கோருதல்
2. இதற்காக ஒரு குழு அமைத்தல்
3. குழுவிற்கு பயிற்சி அளித்தல்
4. குழு மூலம் கிராமப் பொதுக் கூட்டம் நடத்துதல்
5. ஊரைச் சுற்றிப்பார்த்தல் (Transect walk)
6. சமூக வரைபடம் வரைதல் (ஊரின் பொதுவான இடத்தில்)
7. மக்களின் பொருளாதார நிலையை அறிதல் (வசிக்கும் வீட்டின் கட்டுமானம் உள்ளடவைகளை அடிப்படையாகக் கொண்டு)
8. நலிவுற்றோர், மாற்றுத்திறனாளி, மாற்றுப் பாலினத்தினர் மற்றும் பழங்குடியினரை அடையாளம் காணுதல்
9. தரவுகளைப் பரிசோதனை செய்து, ஆவணப்படுத்துதல்
10. தயாரிக்கப்பட்ட இலக்கு மக்கள் பட்டியலை பொதுமக்கள் பார்வைக்கு வைத்தல்
11. தயாரிக்கப்பட்ட பட்டியலில் உள்ள முரண்பாடுகளைக் களைந்து தேவைப்படும் திருத்தங்களை மேற்கொள்ளுதல்
12. கிராமசபையில் பட்டியலை வைத்து ஒப்புதல் பெறுதல்
13. கிராமசபையில் ஒப்புதல் பெறப்பட்ட இறுதி பட்டியல் மற்றும் தொடர்புடைய ஆவணங்களை ஊராட்சி அளாவிலான கூட்டமைப்பு (PLF) மற்றும் வறுமை ஒழிப்பு சங்கத்திடம் (VPRC) ஒப்படைத்தல்

## 8.7 தயாரிக்கப்பட்ட PIP பட்டியல் கிராமசபை ஒப்புதலைப் பெற வேண்டுமா?

ஆம். கிராமசபையில் கட்டாயம் ஒப்புதல் பெறுவது அவசியம்.

## 8.8 தயாரிக்கப்பட்ட PIP பட்டியலைப் புதுப்பிக்க முடியுமா?

ஆம். புதுப்பிக்க முடியும்.

### 8.9 ஒவ்வொரு முறை PIP பட்டியல் புதுப்பிக்கப்படும் போதும் கிராமசபை ஒப்புதலைப் பெற வேண்டுமா?

கிராமசபை மூலமாகவே இப்பட்டியல் புதுப்பிக்கப்படுவதால் கிராமசபையின் ஒப்புதல் என்பது கட்டாயமானது.

### 8.10 தயாரிக்கப்பட்ட PIP பட்டியல் யாரின் பொறுப்பில் அல்லது கட்டுப்பாட்டில் இருக்கும்?

வறுமை ஒழிப்பு சங்கம் மற்றும் ஊராட்சி அளாவிலான கூட்டமைப்பின் பொறுப்பில் இப்பட்டியல் இருக்கும்.

### 8.11 எனது பெயர் PIP பட்டியலில் இருக்கிறதா என அறிந்து கொள்வது எப்படி?

வறுமை ஒழிப்பு சங்கத்தை தொடர்பு கொண்டு அறிந்துகொள்ள முடியும்.

### 8.12 PIP பட்டியலிலிருந்து ஒருவரின் பெயரை நீக்க முடியுமா? அதற்கான அதிகாரம் யாருக்கு உள்ளது?

கிராமசபையின் மூலமாக பட்டியலில் உள்ள ஒருவரது பெயரை நீக்கமுடியும்.

### 8.13 PIP பட்டியலில் இடம் பெறுவதற்காக வயது வரம்பு ஏதேனும் உள்ளதா?

இல்லை. இது ஒருவரின் சமூகப் பொருளாதார நிலையைப் பொருத்த பட்டியலாக இருப்பதால் இதற்கு வயது வரம்பு என எதுவும் இல்லை.

### 8.14 PIP பட்டியலில் பொருளாதார நிலையில் மிகவும் ஏழை மக்களை வகைப்படுத்துவதற்கான அளவீடுகள் என்னென்ன?

- அடிப்படைத் தேவைகளான உணவு, உடை மற்றும் தங்குவதற்கு சரியான வீடு போன்றவற்றைப் பெற முடியாத குடும்பங்கள்.
- வீடற்றவர்கள்/ மண் சுவர்களாலான ஒற்றை அறையுள்ள கூரை வீடுகள்
- நிலமற்றவர்கள்
- 16 முதல் 59 வயதுக்குட்பட்ட வருமானம் ஈட்ட முடியாத ஆண் உறுப்பினர் உள்ள குடும்பங்கள்
- பெண்களைத் தலைமையாகக் கொண்ட குடும்பங்கள்
- விடுவிக்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்கள்
- எதிர்பாராமல் ஏற்பட்ட இயற்கை சீற்றங்கள், தொற்றுநோய்கள், விபத்துக்கள்

மற்றும் தொடர் இறப்புகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள். கோவிட் தொற்று நோயால் குடும்ப உறுப்பினர்களை இழந்தவர்கள்.

## 8.15 PIP பட்டியலில் பொருளாதார நிலையில் மிகவும் ஏழையில் நலிவுற்றோர் மக்களை வகைப்படுத்துவதற்கான அளவீடுகள் என்னென்ன?

மிகவும் ஏழைகளிலிருந்து அன்றாட உணவு மற்றும் சமூகப் பாதுகாப்பிற்காகப் போராடும் குடும்பங்கள் கண்டறியப்பட்டு, அவர்கள் நலிவுற்றோர்களாக வாகப்படுத்தப்பட்டு அந்தக் குடும்பங்களின் முன்னேற்றத்திற்கு சிறப்புக் கவனம் செலுத்தப்படுகிறது.

- இளம் விதவைகள், புறக்கணிக்கப்பட்டவர்கள், ஆதரவற்றோர், கைவிடப்பட்டவர்கள் (50 வயதுக்கும் குறைவானவர்கள்), சமூகப் பாதுகாப்பு இல்லாதவர்கள் மற்றும் போதிய வருமானம் இல்லாதவர்கள்.
- திருமணமாகாத பெண்கள்
- ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் குழந்தைத் தொழிலாளர்கள்.
- கைவிடப்பட்ட முதியவர்கள் (60 வயதுக்கு மேல்) மற்றும் குழந்தைகளின் ஆதரவின்றி வாழும் முதியவர்கள்
- சமூகத்தால் புறக்கணிக்கப்பட்ட திருநங்கைகள்
- நாடோடிகள், பழங்குடியினர் (நரிக்குறவர்கள், தெருக் கலைஞர்கள் போன்றோர்)
- விடுவிக்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்கள்
- நாள்பட்ட நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் (காசநோய், இதய நோய், வலிப்பு நோய், யானைக்கால் நோய், எச்.ஐ.வி தொற்று போன்றவை)

## 8.16 PIP பட்டியலில் பொருளாதார நிலையில் மிகவும் ஏழையில் மாற்றுத்திறனாளி மக்களை வகைப்படுத்துவதற்கான அளவீடுகள் என்னென்ன?

- உடல் மற்றும் மனநிலையில் ஏற்பட்ட பாதிப்பின் காரணமாக தங்களது அன்றாட வேலைகளை செய்வதிலும் மற்றும் சமூகப் பொருளாதார செயல்பாடுகளில் ஈடுபடுவதிலும் சிரமப்படுபவர்கள் மாற்றுத்திறனாளிகளாகக் கருதப்படுகிறார்கள்.
- மாற்றுத்திறன் 40%க்கும் அதிகமாக உள்ள பின்வரும் நபர்கள் உடல் ஊனமுற்றவர்களாகக் கருதப்படுகிறார்கள்.

1. பார்வையற்றோர்
2. பார்வைக் குறைபாடுடையோர்
3. தொழுநோயிலிருந்து குணமானவர்கள்
4. செவித்திறன் குறைபாடுடையோர்
5. தானாக இயங்க இயலாமை
6. குள்ளத்தன்மை
7. அறிவுசார் குறையாடுடையோர்
8. மனநோயுள்ளோர்

9. ஆட்டிசம் நிறமாலைக் கோளாறு
10. பெருமூளை வாதம்
11. தசைநார் தேய்வு
12. நாள்பட்ட நரம்பியல் குறைபாடுகள்
13. குறிப்பிட்ட கற்றல் குறைபாடுகள்
14. தண்டுவட மரப்பு நோய்
15. பேச்சு மற்றும் மொழி குறைபாடு
16. இரத்த அழிவு சோகை
17. இரத்த உறைதல் குறைபாடு
18. அரிவாள் உயிரணு சோகை
19. காதுகேளாத குருட்டுத்தன்மை உட்பட பல குறைபாடுகள்
20. ஆசிட் வீச்சால் பாதிக்கப்பட்டவர்கள்
21. நடுக்குவாத நோய்

## 8.17 PIP பட்டியலில் பொருளாதார நிலையில் ஏழை மக்களை வகைப்படுத்துவதற்கான அளவீடுகள் என்னென்ன?

- சில அடிப்படை வசதிகளுடன் போதுமான உணவு, உடை வசிக்கும் இடத்துடன் குறிப்பிட்ட வருமானம் உள்ள குடும்பங்கள்
- குடிசைத் தொகுப்பு வீடு அல்லது கூரை வீட்டில் வசிக்கும் குடும்பங்கள்
- இரண்டு நபர்கள் வருமானம் ஈட்டக்கூடிய குடும்பங்கள்
- கால்நடைகளை வைத்திருக்கும் குடும்பங்கள்
- ஒரு ஏக்கருக்கும் குறைவான சாகுபடி நிலம் மற்றும் 2 ஏக்கருக்கும் குறைவான தரிசு நிலம் உள்ள குடும்பங்கள்
- சிறு தொழில் செய்து குறைந்த வருமானம் ஈட்டக்கூடிய குடும்பங்கள் (நெசவாளர்கள், குயவர்கள், சிற்பிகள் போன்றவர்கள்) அல்லது கைவினைஞர்கள்
- குறிப்பிட்ட நேரத்திற்கேற்ற வியாபாரம் செய்யும் குடும்பங்கள்.
- குத்தகை நிலங்களில் விவசாயம் செய்யும் குடும்பங்கள்

## 8.18 PIP பட்டியலில் பொருளாதார நிலையில் நடுத்தர மக்களை வகைப்படுத்துவதற்கான அளவீடுகள் என்னென்ன?

- மிகவும் ஏழைகள் மற்றும் ஏழைகள் என்று வகைப்படுத்தப்பட்ட மேற்கூறியவர்களை விட ஒப்பீட்டளவில் சிறப்பாக வாழும் குடும்பங்கள்
- இலகுரக மோட்டார் வாகனங்களைக் கொண்ட குடும்பங்கள்
- விவசாயம் செய்வதற்கான பண்ணை உபகரணங்கள் வைத்திருக்கும் குடும்பங்கள் (டிராக்டர், டிரில்லர் போன்றவை)
- குறைந்தபட்சம் 2.5 ஏக்கர் விவசாயம் செய்ய பம்ப் செட் இணைப்புள்ள குடும்பங்கள்
- ஆண்டு வருமானம் ரூ. 50,000 முதல் 1,00,000 வரை உள்ள குடும்பங்கள்
- குறைந்தபட்சம் 2 முதல் 5 மாடுகள் அல்லது 10 முதல் 20 ஆடுகள் உள்ள

குடும்பங்கள்

- பகுதி நேர ஊழியர்களான அங்கன்வாடிப் பணியாளர்கள், சத்துணவுத் திட்டம் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிப் பணியாளர்களின் குடும்பங்கள்

## 8.19 PIP பட்டியலில் பொருளாதார நிலையில் வசதியான மக்களை வகைப்படுத்துவதற்கான அளவீடுகள் என்னென்ன?

- அரசுத் துறைகளில் பணிபுரியும் குடும்பங்கள்
- 5 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருக்கும் குடும்பங்கள்
- ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ள குடும்பங்கள்
- நான்கு சக்கர வாகனங்கள் வைத்திருக்கும் குடும்பங்கள்
- வருமான வரி செலுத்தும் குடும்பங்கள்
- ஆட்டுப் பண்ணை / கோழிப் பண்ணை / பால் பண்ணை போன்ற பண்ணை வைத்திருக்கும் குடும்பங்கள்.

மக்கள் நிலை ஆய்வு தொடர்பான
வழிகாட்டுதல்கள் மற்றும் குடும்ப தகவல்
அட்டை மாதிரி

***எங்கள் ஊராட்சியின் கிராமசபைக் கூட்டத்தில் அனைத்து விவாதப் பொருட்களும் விரிவாக விவாதிக்கப்படும். அங்கன்வாடி பற்றியும், குடிநீர் பிரச்சினை பற்றியும், சாலை தேவைகள் பற்றியும், ஊராட்சியின் அடுத்த கட்டத் திட்டங்கள் பற்றியும், பள்ளி மேம்பாட்டுக்கான தேவைகள் பற்றியும் விரிவாகப் பேசப்படும். கிராமப் பெண்களாக நாங்கள் அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் பொழுதுதான் பொதுமக்கள் சந்தித்து வரும் பிரச்சனைகள் குறித்தும் ஊராட்சி எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்தும் தெரிந்து கொள்ள முடிகிறது. இது எங்களுக்கு மிகுந்த பயனுள்ளதாக இருக்கிறது. அதேபோல குழுவில் செயல்பாடுகளைத் தொடர்ந்து வெளிப்படையாகக் கிராமசபையில் வைப்பதால் எங்கள் மேல் மக்களுக்கு ஒரு நம்பிக்கை வருவதற்கான வாய்ப்பாகவும் இந்தக் கிராமசபைக் கூட்டம் அமைந்துவிடுகிறது.***

***- அரங்கூர் PLF குழு***

# 9. கிராம சேவை மையமும் மகளிர் திட்டமும்

## 9.1 ஒவ்வொரு ஊராட்சியிலும் உள்ள கிராம சேவை மையக் கட்டிடம் எதற்காக அமைக்கப்பட்டது?

வருமானச் சான்றிதழ், குடும்ப (ரேஷன்) அட்டையில் திருத்தங்கள் உள்ளிட்ட பல அரசு சேவைகளை இணைய வழியில் பெறுவதற்காக கிராம அளவிலேயே அமைக்கப்பட்ட மையங்கள்தான் இவை. கணினி, அச்சு இயந்திரம் (Printer) உள்ளிட்ட பொருட்கள் தமிழ்நாடு அரசின் மூலம் வழங்கப்பட்டு அந்த மையத்தினை இயக்குவதற்கு சுய உதவிக் குழு மகளிர் ஒருவருக்கு பயிற்சியும் வழங்கப்பட்டது.

## 9.2 கிராம சேவை மைய கட்டிடம் யாரின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டது?

ஊராட்சி நிர்வாகத்தின் பொறுப்பில் இருக்கிறது இக்கட்டிடம்.

## 9.3 கிராம சேவை மையத்தைச் செயல்பாட்டுக் கொண்டு வருவதற்கு என்ன செய்ய வேண்டும்?

ஊராட்சி நிர்வாகம் மற்றும் மாவட்ட மகளிர் திட்ட அலுவலர்கள் இணைந்து கிராம சேவை மையங்கள் இயங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசு சேவைகள் கிராம அளவிலேயே மக்களுக்குக் கிடைக்க இந்த மையங்கள் பெறும் உதவியாக இருக்கும்.

குறிப்பு: அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் பிராட்பேண்ட் இணைப்பை வழங்குவதற்காக மேற்கொள்ளப்படும் பாரத்நெட் திட்டம் தற்போது நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. ஊராட்சிகள் தோறும் அதற்கான கருவிகள் பொருத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் செயல்பாட்டிற்கு வந்தவுடன் கிராமங்களில் கூடுதல் இணைய வேகம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த சூழலில் ஒவ்வொரு ஊராட்சியிலும் உள்ள கிராம சேவை மையத்தினை செயல்பாட்டிற்குக் கொண்டுவருவது மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும்.

# 10. வெற்றிக் கதைகள்

**200 ரூபாயில் துவங்கி....**
**இன்று பலரின் வாழ்வில் நம்பிக்கை ஒளி ஏற்றியிருக்கும் ஒரு மகளிர் குழு கூட்டமைப்பின் கதை!**

## மகளிரின் வெற்றிக்கதை !!

"2017 காந்தி ஜெயந்தி கிராமசபைக் கூட்டம் தான் துவக்கப் புள்ளியாக அமைந்தது". 'இவ்வளவு பெரிய ஊராட்சியில் வெறும் இரண்டு குழுக்கள்தான் இருக்கு. இங்க இன்னும் நிறையக் குழுக்களை ஆரம்பிக்க முடியும்' என மகளிர் திட்டப் பொறுப்பாளர் கிராமசபையில் தெரிவித்தது குழு துவங்குவதற்கு ஊக்கமாக அமைந்தது, என்கிறார் திரு.மாரிப்பாண்டி.

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம், சாமநத்தம் ஊராட்சியில் மகளிர் குழுக்கள் வெளிப்படையுடனும், வெறும் கடன் கொடுப்பதைத் தாண்டி வாழ்வாதாரத் தொழில்களில் ஈடுபட ஊக்கமளித்தும் வரும் செயல்பாட்டாளர் தான் மாரிப்பாண்டி.

"கிராமசபை முடிந்த அன்று மாலையே மக்களிடம் பேசினோம். எங்கள் பகுதி மகளிர் ஒன்றிணைந்து புதிய குழு துவங்குவது என முடிவெடுத்தோம். அன்று 200 ரூபாயைச் சேமிப்புத் தொகையாகச் செலுத்துவதில் துவங்கி இன்று சுமார் 1 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் வரை வங்கிச் சேமிப்பாக வைத்திருக்கிறோம்" என நம்பிக்கையோடு சொல்கிறார் ஊராட்சிக் குழு கூட்டமைப்பின் முன்னாள் செயலாளர் திருமதி.ஜெயலட்சுமி.

"மாதம் தோறும் நடைபெறும் எங்கள் குழு (பெருமானந்தல் குழு) கூட்டத்தின் மூலம் உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் நட்புறவு கொண்டு ஒன்றுபட்ட ஒரு குழுவாக இயங்குவதற்குரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். எல்லாவற்றுக்கும் மேலாக குழுவிற்குக் கிடைக்கும் கடன் தொகையினை அனைத்துக் குழு உறுப்பினர்களுக்கும் சமமாகப் பிரித்துக்கொடுக்கிறோம். எந்தக் காரணத்திற்காகவும் அத்தொகை ஒரு தனி நபருக்கு மட்டும் கிடைக்கும்படி கொடுப்பதில்லை" என்றனர் பெருமானந்தல் குழுவின் உறுப்பினர்கள். மேலும், கடன் மூலம் வெற்றிகரமாகச் சுயதொழில் மேற்கொண்டு வருபவர்கள் பற்றியும் மகிழ்ச்சியோடு நம்மிடம் பகிர்ந்துகொண்டார்கள்.

***மகளிர் திட்டம் மூலம் தனது ஷேர் ஆட்டோவை கொடுத்து விட்டு லோடு ஆட்டோ வாங்கி மாதம் சுமார் 25 ஆயிரம் ரூபாய் வரை சம்பாதிக்கும் சாமநத்தம் ஊராட்சியில் வசிக்கும் மகளிர் குழு உறுப்பினர் திருமிகு தமிழ்ச்செல்வியின் மகன் திரு.பிரபு.***



***குழு கடன் மூலம் பெயிண்டிங் தொடர்பான உபகரணங்கள் வாங்கி, கூலி ஆட்கள் மூலம் சொந்த தொழில் நடத்தி மாதம் ரூபாய் 30 ஆயிரம் சம்பாதிக்கும் சாமநத்தம் ஊராட்சியின் குழு உறுப்பினர் திருமிகு பாண்டீஸ்வரியின் கணவர் திரு.கண்ணன்.***



***புதிதாக ஷேர் ஆட்டோ வாங்கி மாதம் 20 ஆயிரம் ரூபாய் வரை சம்பாதிக்கும் சாமநத்தம் ஊராட்சியின் குழு உறுப்பினர் திருமிகு மஞ்சுளாவின் கணவர் திரு.கணேசன்***



***அரிசி மற்றும்  பலசரக்குக்கடை நடத்தி வரும் சாமநத்தம் ஊராட்சியின் குழு உறுப்பினர் திருமிகு ஜெயலட்சுமியின் கணவர் திரு மாரிப்பாண்டியால் மாதம் 20 ஆயிரம் ரூபாய் வரை சம்பாதிக்க முடிகிறது.***

***கணவரால் கைவிடப்பட்ட சாமநத்தம் ஊராட்சியின் திருமதி. உஷா மாரி, தனது மகனின் உயர்கல்விக்கு (B.COM) குழு கடன் உதவியதை நன்றியோடு நினைவு கூறுகிறார்.***

“இப்படிப் பல வாழ்வாதாரத் தொழில்களுக்கு நிதி கொடுத்து குடும்பங்களின் முன்னேற்றத்திற்கும் குழந்தைகளின் கல்விக்கும் உதவி வருகிறது எங்கள் குழு. அதேபோல, ஆவணங்கள் உள்ளிட்ட பிற தகவல்களைக் குழுக் கூட்டத்தில் வெளிப்படையாக வைப்பதில் அனைவரும் உறுதியாக இருக்கிறோம்.” “எங்களுக்குள் உள்ள நம்பிக்கையே குழுவின் வெற்றிக்குக் காரணம்” என நம்பிக்கையோடு சொல்கிறார்கள் குழு உறுப்பினர்கள் அனைவரும்.

சிறு தொகையை முதலீடாகக் கொண்டு தொடங்கப்பட்டு, இன்று தங்கள் ஊராட்சியின் நம்பிக்கையாக மாறிவரும் பெருமானந்தல் மகளிர் குழுவினர் மற்றும் சாமநத்தம் ஊராட்சிக் குழு கூட்டமைப்பினரை நாம் அனைவரும் வாழ்த்துவோம்!

# 11. அரங்கூர் கிராம ஊராட்சி மகளிர் குழுக் கூட்டமைப்புப் [PLF] பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல்

**இடம்:** கிராம சேவை மையக் கட்டிடம், அரங்கூர் (PLF அலுவலகமாகச் செயல்படுகிறது)
**நாள்:** 16.08.2023

பங்கு பெற்றவர்கள்:

அரங்கூர் PLF பொறுப்பாளர்கள்:

1. திருமதி. B. தேவி, செயலாளர்
2. திருமதி. M. உஷா, VPRC செயலாளர்
3. திருமதி V. சுகண்யா பொருளாளர்
4. திருமதி. R. அஞ்சலம், கணக்காளர்
5. திருமதி. R. ஜெயஸ்ரீ VPRC பொருளாளர்

நம் குழுவினர்:

6. திரு கருணா மு. மக்கள் நலவாழ்வு இயக்கம்
7. திரு வினோத்குமார் இரா, தன்னாட்சி
8. திரு நந்தகுமார் சிவா, தன்னாட்சி

**வணக்கம்!**
**இந்த PLF கூட்டமைப்பு அலுவலகத்தில், குழுவின் பெயர்கள், அவர்களுக்கு வழங்கப்பட்ட கடன் மற்றும் பிற தகவல்களை அனைவரும் பார்க்கும்படி அட்டவணையாக எழுதி ஒட்டி உள்ளீர்கள். இது ஒரு நம்பிக்கையைக் கொடுக்கிறது. வாழ்த்துக்கள்!**

**வணக்கம்!**
**மிக்க நன்றி.**

**மொத்தம் எத்தனைக் குழுக்கள் இந்த ஊராட்சியில் செயல்படுகின்றன?**

அரங்கூர் ஊராட்சியில் மொத்தம் 21 மகளிர் சுய உதவிக் குழுக்கள் உள்ளன. அவர்கள் அனைவரும் கூட்டமைப்போடு இணைந்து செயல்படுகிறார்கள்.

**முதியோர் குழுக்கள் இயங்குகின்றனவா?**

ஆம்.
இரண்டு முதியோர் குழுக்கள் இருக்கின்றன. இதில் ஒரு விஷயத்தைக் குறிப்பிட வேண்டும். 60 வயதுக்கு மேற்பட்டோர் இருப்பதால், துவக்கத்தில் இக்குழுவிற்குக் கடன் கொடுக்க வங்கியில் மிகவும் தயக்கம் காட்டினார்கள். எங்களின் விடாமுயற்சியால் குழு கடன் பெற்று தற்போது உரிய நேரத்தில் கடனைத் திருப்பிச் செலுத்தும் குழுக்களுள் ஒன்றாக இருப்பது இந்த முதியோர் குழுக்கள் தான்.

**மாற்றுத்திறனாளிகளுக்கான குழுக்கள்?**

ஆம்,
மாற்றுத்திறனாளி குழு ஒன்றும் எங்கள் ஊராட்சியில் செயல்படுகிறது. வறுமை ஒழிப்பு சங்கம் மூலம் இயங்கி வருகிறது அக்குழு.

**வங்கிக்குச் சென்று வரும் செலவை எப்படி சமாளிக்கிறீர்கள்?**

PLF குழு: குழுவின் ஊக்குநர் மற்றும் பிரதிநிதிக்கான பயண மற்றும் இதர செலவுகளுக்கு மாதம் ₹150 எடுத்துக் கொள்கிறோம். இதற்கு முன்பாக பயண செலவு போக மீதி இருந்த தொகையினைக் குழுக் கணக்கில் செலுத்தி வந்தோம். இருப்பினும், தங்களின் ஒரு நாள் கூலி வேலையை விட்டுவிட்டுச் சென்று வருவதால் மீதித் தொகையினை ஊக்குனர் மற்றும் பிரதிநிதிக்குக் கொடுக்கலாம் எனக் குழுவினர் பரிந்துரைத்ததால் தற்போது அவ்வாறே செய்கிறோம். இதனால், வங்கிக்குச் செல்லத் தயங்கி வந்த பல குழுக்களின் ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகள்

தற்போது காலதாமதப்படுத்தாமல் உரிய நேரத்தில் வங்கிக்குச் சென்று சந்தா தொகையைச் செலுத்துவது உள்ளிட்ட வங்கிப் பணிகளை உடனுக்குடன் முடித்து விடுகிறார்கள் எதையும் நிலுவையில் வைப்பதில்லை.

**குழுவிற்கு வழங்கப்பட்ட கடன் பற்றி ...**

குழுக்களுக்கு PLF மூலம் Bulk loan வழங்கப்பட்டிருக்கிறது. அது தவிர சம்பந்தப்பட்ட குழுக்கள் வங்கியை நேரடியாகத் தொடர்பு கொண்டு குழுக் கடன்களைப் பெற்றுள்ளார்கள்.

Bulk Loan I தவணை: ரூ 30,00,000
பயனடைந்த குழுக்களின் எண்ணிக்கை: 13

Bulk Loan II தவணை: ரூ 95,00,000
பயனடைந்த குழுக்களின் எண்ணிக்கை: 17

வங்கி நேரடிக்கடன் தொகை: ரூ 59,60,000
பயனடைந்த குழுக்களின் எண்ணிக்கை: 12

**தனியார் நிதி நிறுவனங்கள் உங்கள் ஊராட்சியில் உள்ளனவா?**

ஆம், இருக்கிறார்கள்.
ஆனால் அவர்கள் கூடுதல் வட்டிக்குக் (2%) கடன் கொடுக்கிறார்கள். தற்போது கூட்டமைப்பு மூலம் குழுக்கள் முறையாகச் செயல்பட்டு வருவதாலும், நிலுவைத் தொகையே இல்லாததாலும் தனியார் நிறுவனத்திலிருந்து கடன்களை முடித்துக் கொண்டு நமது கூட்டமைப்பில் மீண்டும் பலர் இணைகிறார்கள்.

குழு உறுப்பினர்கள் முறையாகத் தொகையைத் திரும்பச் செலுத்தி விடுகிறார்களா?

ஆம். செலுத்தி விடுகிறார்கள்.
நீங்கள் முதலில் குறிப்பிட்டது போல குழுவிற்கு வழங்கப்படும் கடன் தொகை உள்ளிட்ட விவரங்களை வெளிப்படையாக அட்டவணை இட்டு அனைவரும் அறிந்து கொள்ளும்படி தெரிவித்து விடுகிறோம். இதனால் அனைவரும் நம்பிக்கையோடும் ஒத்துழைப்போடும் உடனுக்குடன் உரிய நேரத்தில் கடனைச் செலுத்தி விடுகிறார்கள்.

ஆம் அதைப் பற்றியும் கேட்க வேண்டும்! அனைத்தையும் வெளிப்படையாக அனைவரும் பார்க்கும்படி வைத்துள்ளீர்கள் இதைப் பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்.

சில ஆண்டுகளுக்கு முன்பு எங்கள் ஊராட்சியில் கூட்டமைப்பு செயல்படாத நிலையில் இருந்தது. அதற்கு, அப்போது வழங்கப்பட்ட வங்கிக் கடன் தொகை தொடர்பாக முறையான விளக்கங்கள் அளிக்கப்படாத நிலையில் குழு உறுப்பினர்களிடையே ஒத்துழைப்பு இல்லாத சூழல் நிலவியது. ஏற்கனவே நம்பிக்கையில்லாத நிலையிலிருந்த இந்தக் குழு கூட்டமைப்பை மீண்டும் செயல்பாட்டுக்குக் கொண்டு வருவதற்கு நாங்கள் எடுத்த முதல் முடிவு, வெளிப்படைத்தன்மை. கடன் விவரங்கள் மட்டுமல்லாமல், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் செல்வதாக இருந்தாலும் வட்டார வளர்ச்சி அலுவலகம் செல்வதாக இருந்தாலும் பயிற்சி அல்லது பிற அலுவல் பணிகளுக்குச் செல்வதாக இருந்தாலும் பொறுப்பாளர்கள் மற்றவரிடம் தகவல் தெரிவித்து விட்டு இயங்குவது உள்ளிட்ட அனைத்து விஷயங்களிலும் தகவல்களை

வெளிப்படையாக வைத்திருப்பதனால் ஒரு குடும்பமாக எங்களால் இயங்க முடிகிறது.

**வாராக் கடன் ஏதேனும் உள்ளதா?**

இல்லை. சில ஆண்டுகளுக்கு முன்பு குழுக்களுக்கு வழங்கப்பட்ட PLF கடன் வராமல் இருந்தது பற்றியும் அதனால் செயல்பாடுகள் இல்லாமல் சென்ற நிலையைப் பற்றியும் குறிப்பிட்டு இருந்தோம். தற்போது வாராக்கடன் எதுவும் இல்லை.

**கூட்டமைப்பு பிரதிநிதிகளுக்கான தேர்வு பற்றிச் சொல்லுங்கள்.**

எங்கள் ஊராட்சியைப் பொருத்தவரை இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை புதிய பொறுப்பாளர்கள் கட்டாயமாகத் தேர்வு செய்யப்பட வேண்டும் என்ற விதியினை கடைப்பிடித்து வருகின்றோம். கடந்த 2022 நடைபெற்ற தேர்தலில் புது பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். எந்த ஒரு பொறுப்பாளரும் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளுக்கு மேல் இயங்குவதற்கு வாய்ப்பில்லை.

**கணக்கு பராமரிப்பு எவ்வாறு மேற்கொள்கிறீர்கள்?**

இது குறித்து கணக்காளர் விளக்கமளிப்பார்.

பொறியியல் பட்டதாரியான எனக்கு, கணக்குப் பராமரிப்பில் பயிற்சியும் கணினிப் பயன்பாட்டில் தேர்ச்சியும் இருப்பதால் வரவு செலவு விவரங்கள் பராமரிப்பதில் சிரமம் ஏதுமில்லை. மேலும் குழு உறுப்பினர்கள் ஒத்துழைப்பு இருப்பதால் வங்கிப் பணிகளை மேற்கொள்வது, ஆட்சியர் அலுவலகத்திற்குப் பயிற்சிக்குச் செல்வது உள்ளிட்ட வேலைகளையும் சுலபமாகச் செய்து முடிக்க முடிகிறது.

நீங்கள் பொறியாளராக இருப்பதால் வரவு செலவுக் கணக்குகளைப் பராமரிப்பதற்குக் கணினியைப் பயன்படுத்துகிறீர்களா? மகளிர் திட்டம் மூலம் கணினி வழங்கி உள்ளார்களா?

கணக்காளர்: ஆம், வழங்கி உள்ளார்கள். கணினி மூலமாகவே, அனைத்துக் குழுக்களின் வரவு செலவுக் கணக்குளைப் பரமாறிப்பது, கூட்டமைப்பின் கணக்குகளைப் பராமரிப்பது ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகிறோம்.

மாலை நேரத்திலும் கணினியைப் பயன்படுத்த முடியும் என்பதால் கணக்காளரின் இல்லத்திலேயே கணினி இருக்கிறது.

பொறியாளரான நீங்கள் சிறிய ஊக்கத்தொகை மட்டுமே உள்ள இந்த வேலையைச் செய்வது வருவது பாராட்டுக்குரியது. இந்தப் பணியைச் செய்ய உங்களுக்கு ஊக்கமளித்தது எது?

நன்றி.
எங்கள் ஊராட்சியின் ஒரு கிராமசபைக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டபோது, ஊராட்சியின் மேம்பாட்டுக்காகத் தலைவர் பல முயற்சிகளை மேற்கொண்டு வருவதை அறிந்து கொள்ள முடிந்தது. அன்று முதல் ஊர் வளர்ச்சிக்கு எனது பங்காக இந்தப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டு அனைவரின் ஒத்துழைப்போடு செயல்பட்டு வருகிறேன்.

**வறுமை ஒழிப்பு சங்கத்தின் (VPRC) பணிகள் பற்றி?**

எங்கள் ஊராட்சியைப் பொருத்தவரை சங்கத்தினை இன்னும் பலப்படுத்த வேண்டியுள்ளது. தற்போது கூட்டமைப்பை வலுப்படுத்தும் பணிகளை மேற்கொண்டு வருகிறோம். விரைவில் வறுமை ஒழிப்பு சங்கத்தையும் முழுமையாகச் செயல்பட வைக்கத் திட்டமிட்டுள்ளோம்.

**ஊராட்சி நிர்வாகத்தின் ஒத்துழைப்பு எவ்வாறு உள்ளது?**

ஊராட்சி நிர்வாகத்திடமிருந்து கூட்டமைப்பிற்கு மிகுந்த ஒத்துழைப்பு இருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். அதேபோல கூட்டமைப்பின் செயல்பாடுகள் உள்ளிட்ட அனைத்துத் தகவல்களையும் ஊராட்சி நிர்வாகத்தோடு அவ்வப்போது பகிர்ந்து கொள்வோம். மேலும், கிராமசபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு எங்கள் பங்களிப்பினை வழங்கி வருகிறோம்.

**PLF பொறுப்பாளர்கள் கிராமசபைக் கூட்டத்தில் கலந்து கொள்வது பற்றி சொன்னீர்கள். அது பற்றி கொஞ்சம் விளக்கங்கள்.**

**எங்கள் ஊராட்சியின் கிராமசபைக் கூட்டத்தில் அனைத்து விவாதப் பொருட்களும் விரிவாக விவாதிக்கப்படும். அங்கன்வாடி பற்றியும், குடிநீர் பிரச்சினை பற்றியும், சாலை தேவைகள் பற்றியும், ஊராட்சியின் அடுத்த கட்டத் திட்டங்கள் பற்றியும், பள்ளி மேம்பாட்டுக்கான தேவைகள் பற்றியும் விரிவாகப் பேசப்படும். கிராமப் பெண்களாக நாங்கள் அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் பொழுதுதான் பொதுமக்கள் சந்தித்து வரும் பிரச்சனைகள் குறித்தும் ஊராட்சி எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்தும் தெரிந்து கொள்ள முடிகிறது. இது எங்களுக்கு மிகுந்த பயனுள்ளதாக இருக்கிறது. அதேபோல குழுவில் செயல்பாடுகளைத் தொடர்ந்து வெளிப்படையாகக் கிராமசபையில் வைப்பதால் எங்கள் மேல் மக்களுக்கு ஒரு நம்பிக்கை வருவதற்கான வாய்ப்பாகவும் இந்தக் கிராமசபைக் கூட்டம் அமைந்துவிடுகிறது.**

**தங்கள் கூட்டமைப்பு சந்திக்கும் சவாலாக எதைப் பார்க்கிறீர்கள்?**

**பெற்ற கடனின் மூலம் தொழில் துவங்க வேண்டும் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். ஊராட்சித் தலைவரும் அதற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தயாராக இருக்கிறார். ஆனாலும் மகளிருக்குப் பெரிய தயக்கம் இருக்கிறது. இனிவரும் காலங்களில் ஏதேனும் தொழில் வாய்ப்பினை ஏற்படுத்தி அதில் வெற்றி பெறும் குழுக்கள் உருவாகும் என்ற நம்பிக்கை இருக்கிறது.**

**உங்கள் அனுபவங்களிலிருந்து மற்ற கிராமத்து PLF பிரதிநிதிகளுக்கு நீங்கள் சொல்ல விரும்புவது என்ன?**

**முழுக்க முழுக்க நிதி சம்பந்தமான இந்தப் பணியில் நம்பிக்கை இருக்கும்படி பொறுப்பாளர்கள் நடந்து கொள்வதும், சுழற்சி முறையில் புதிய பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுவதும் மிக முக்கியம். மேலும், புதிய பொறுப்பாளர்களுக்கு உதவியாக மற்றவர்கள் இருந்து, அவர்களின் பணிகளுக்கு உதவி செய்வது நமது கூட்டமைப்பைப் பலப்படுத்தும்.**

**தகவல்களை மிகவும் விளக்கமாகசிக் சொன்னீர்கள். மிக்க நன்றி**

**எங்கள் ஊராட்சிக்கு வந்து எங்களுடன் கலந்துரையாடியதற்கு, நன்றி.**

# 12.பயிற்சியளிக்கத் தயாராக உள்ளோம்:

இப்புத்தகத்தை முழுமையாகப் படித்த அனைவருக்கும் தன்னாட்சியின் நன்றிகள். மேலும் இந்த மகளிர் திட்டங்கள்/ மகளிர் குழுக்கள் பற்றி உங்கள் ஊரில், ஊராட்சித் தலைவர்களுக்கு/ ஊராட்சிப் பிரதிநிதிகளுக்கு/ ஊராட்சி மக்களுக்கு/ இளைஞர்களுக்கு பயிற்சியோ அல்லது விழிப்புணர்வோ வேண்டும் என்று நீங்கள் விரும்பினால் எங்களைத் தாராளமாகத் தொடர்பு கொள்ளலாம். நாங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் உங்கள் ஊருக்கு வந்து பயிற்சியளிக்கத் தயாராக உள்ளோம்.

இப்படிக்கு நம்பிக்கையுடன்,
தன்னாட்சி.
தொடர்புக்கு: 9445700758/ 9842780315

## தன்னாட்சியின் பிற வெளியீடுகள்:

•கிராமசபை – அடிப்படை கேள்விகளும் பதில்களும்
•ஊராட்சி நிர்வாகம் – அடிப்படை கேள்விகளும் பதில்களும்
•மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியாளிப்புச் சட்டம் (MGNREGA) – நூறு நாள் வேலை – அடிப்படைக் கேள்விகளும் பதில்களும்
•நகர்ப்புற உள்ளாட்சிகளில் மக்கள் சபைகள் – பகுதி சபை மற்றும் வார்டு குழு – ஓர் எளிய அறிமுகம்

# 13. தன்னாட்சி

‘உள்ளாட்சியில் நல்லாட்சி உள்ளூரில் வளங்குன்றா வளர்ச்சி’ என்ற முழக்கத்தோடு செயல்பட்டு வரும் தன்னாட்சி, உள்ளாட்சியைக் குறிப்பாகக் கிராம ஊராட்சியை, ‘எளிய மக்கள் தங்களுக்காகத் தாங்களே நிர்வாகம் செய்யும் அரசாக’ மாற்ற முயலும் ஒரு மக்கள் இயக்கமாகும். ‘உள்ளாட்சி உங்களாட்சி’ என்ற பெயரில், 2017 ஆம் ஆண்டு முதல் உள்ளாட்சிகளுக்காக, கிராமசபைக்காக, கிராம தன்னாட்சிக்காகத் தொடர்ந்து செயல்பட்டு வரும் சமூகச் செயற்பாட்டாளர்களால், 2018 ஆம் ஆண்டு ‘தன்னாட்சி’ என்ற பெயரில் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம்–1975 இன் கீழ் சங்கமாகப் பதிவு செய்யப்பட்டு இயங்கி வரும் இயக்கமே தன்னாட்சி.

விளிம்பிலும் விளிம்பு நிலையிலுள்ள கடைக் கோடி குடிமக்களும் பொது நிர்வாகம் செய்வதற்கான அதிகாரத்தையும் தகவல்களையும் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற அதிகாரப் பரவலைக் கொள்கையாகக் கொண்டு குரலற்றவர்களின் குரலாகத் தொடர்ந்து ஒலித்து வருகிறது நம் தன்னாட்சி!

மத்தியில் கூட்டாட்சி!
மாநிலத்தில் சுயாட்சி!
‘உள்ளாட்சியில் தன்னாட்சி’!

என்பது வெற்று முழக்கமல்ல.
நாம் வென்றெடுக்க வேண்டிய லட்சியம்!

**தொடர்புக்கு: 9445700758**

சரியான வாய்ப்புகள் வழங்கப்பட்டால் தமிழ்நாடு தழுவிய ஒரு வெற்றியாக நம் மகளிர் இயக்கம் வர முடியும் என்ற நம்பிக்கை நமக்கு உள்ளது. நாம் அனைவரும் இந்தக் குழுக்களைப் பற்றி அறிந்து கொண்டு நமது பங்களிப்பை வழங்குவதற்கு நம்மை தயார்ப்படுத்திக் கொள்வதற்கான வழிகாட்டியே இந்தக் கையேடு. குழுக்கள் அமைக்கப்படும் முறைகள், அதன் நோக்கம். குழு கூட்டமைப்பின் கட்டமைப்பு (PLF). கடன் வகைகள், வெற்றிக் கதைகள், வறுமை ஒழிப்புச் சங்கங்களின் பணிகள் (VPRC) போன்றவை பற்றிய பல தகவல்களைக் கொண்டுள்ளது இக்கையேடு.

ஊராட்சிகள் தொடர்பான உங்கள் சந்தேகங்களுக்கு பதில் அளிக்கிறது.

உள்ளாட்சிகளுக்கான

## மக்கள் தகவல் மையம்

**944 366 2058**

அழைப்பு நேரம்: **9 AM - 1 PM**


தன்னாட்சி
உள்ளாட்சி உங்களாட்சி

தன்னாட்சி (உள்ளாட்சி உங்களாட்சி),
69, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை 600 001.
தொடர்புக்கு: 94457 00758, 90032 32058
மின்னஞ்சல்: thannatchi@gmail.com
இணையதளம்: thannatchi.in
முகநூல்: fb.com/thannatchi
கீச்சகம் (X): @thannatchi
வலையொளி (YouTube):
Thannatchi தன்னாட்சி மற்றும் Ulaatchi Ungalaatchi



நன்கொடை: ரூ 60